# ஈழநாதம்

Eelanatham — வெள்ளி நாதம்

பக்கங்கள் 16 — விலை ரூபா 12.00

நாதம் 13 | திருவள்ளுவர் ஆண்டு 2003 | ஆடி 03 | 19-0 7-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 144




வன்னி மண்ணில்...

மறுதோன்றி (Offset) முறையில் தரமான கலை அழகு மிகுந்த பதிப்புக்களை செய்து கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

அழகன் பதிப்பகம்

கிளிநொச்சி.


## சின்னச் சின்ன பூக்களெல்லாம் வாருங்கள்
## தமிழ்தேசம் வெல்ல வேண்டும் என்று கூறுங்கள்



## ரணிலின் அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சனாதிபதி சந்திரிகா முடிவு ...







நிலாந்தனின்
சமாதானத்தின் ஆயுள்
பக்கம் . 03





அன்ரன் அன்பழகனின்
தமிழர் தாயக தலைநகர்...
பக்கம் . 04





மு.திருநாவுக்கரசுவின்
ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை...
பக்கம் . 06





தாரனின் பார்வையில்...
பக்கம் . 05

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி

# கறுப்பு நாட்களின் நெருப்பு நினைவுகள்

1983 ஆடிக்கலவர நினைவுகள் ஒவ்வொரு உணர்வுள்ள தமிழரின் மனதிலும் நீறுபூர்த்த நெருப்பாய் இன்னமும் கனன்று கொண்டே இருக் கிறது.

தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரத்தீயை மூண்டெரியச் செய்து விட்டு, தீர்வங்கணும் எரிந்து கருகிய தமிழ் மக்களின் உடல் வெக்கையிலும் வெந்தழிந்த தமிழர் மனங் களில் இருந்து வெளியேறிய அனல் மூச்சிலும் அரசியல் கூதல் காய்ந்த பௌத்த சிங்கள இனவாதத் தலை மைகள் பலவும் சாதாரண தீயுடன் தீய்ந்தும் போய்விட்டார்கள்.

ஒரு இனத்தின் வரலாற்றையே பூண்டோடு அழித்துக் கங்கணம் கட்டி வீறாப்பு பேசியவர்கள் பலர் வரலாற்றின் போக்கோடு அள்ளுண்டு விலாசமற்றவர்களாகிவிட்டார்கள்.

காலம் பலரைக் காலமாக்கிவிட்டது, மேலும் பலர் காலத்தால் தூக்கி யெறியப்பட்ட மனிதர்களாகிவிட்டார் கள். பண்டார நாயக்கா முதற்கொண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரேமதாச, ஆர். ஜி. சேனநாயக்கா, சி.பி.டி. சில்வா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, சிறில் மத்தியூ, நெவில் பெர்ணாண்டோ, லலித் அத்துலத் முதலி, ரஞ்சன் விஜேரத்னா, காமினி திஸநாயக்கா என எத்தனைபேர்தான் தமிழினத்தை முற்றாகச் சாவடிப்பதாக சவால் விட்டு களமிறங்கினார்கள்.

1958, 1980, 1977, 1981, 1983, என இடைவெளி விட்டு விட்டு களைப்பாறி களைப்பாறி கலவரங்களை மூட்டி மூட்டி தமிழ் மக்களின் வாழ்வையும், வாழ்விடங்களையும் அழித்து அபகரித்த அந்த குரூர மனத்தவர்கள், தமிழர்களுக்கு எரியூட் டிய தீயின் எஞ்சிய தனலுள் எரிந்தழிந்தும் போய்விட்டார்கள்.

அல்லல்பட்டு ஆற்றாது அழுத தமிழரின் கண்ணீர் அவர்களின் செல்வத்தையே தேய்க்கும் படையான வர லாறு அவர்கள் கண்முன்னாலேயே அவர்களுக்கு ஒரு புதிய வரலாற்றின் எழுச்சியை கோடி காட்டி சிரித்த போது... அவர்கள் கூனிக் குறுகிக் கூசிப்போய்த்தான் இருப்பார்கள். அவமானம் அவர்களை அணுஅணுவாய் சித்திரவதை செய்துதான் இருக்கும். அந்த இருண்ட ஆடியின் கனலும் நினைவுகள் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தத்தை கடந்து விட்ட போதிலும், இந்த இரு தசாப்த காலமும் தமிழ்மக்கள் அவர்கள் எப்படி யெப்படியெல்லாம் அவலங்களுக்குள்ளாக்கப்பட்டார்கள் என்ற எரிமலை எண்ணங்கள் குமுறும் போதெல்லாம் அந்த மூலக் கனலின் வெம்மை இன்னும் தணியாது கனன்று கொண்டிருப்பதை உணர்த்தவே செய்கிறது.

பேரினவாத மூலவர்கள் இல்லாமல் போய்விட்டாலும், அவர்களின் வாரிசுகள் அதைத்தொடரவே செய்கிறார்கள் அவர்களின் அரசியலுக்கு பேரினவாதம் ஸ்திரத்தன்மை அளிப்பதாக அவர்கள் நம்புகிறார்கள் - மத வாதமுலாம் கவர்ச்சியை வழங்கும் என்ற அவர்களின் மூடநம்பிக்கை வலுவடையவே செய்கிறது. கடந்த கால அனுபவங்கள் அவர்கள்ள, அவர்களின் மூதாதையரின் தவறுகள் பற்றி சிந்திக்க வைக்காதது அவர்களதும் அவர்களின் சிறிலங்கா தேசத்தினதும் துர்ரதிஷ்டமேயாகும்.

இன்னமும் அதே தவறினை புதிய வடிவில் - போர் வடிவில் செய்யும் மூர்க்கம் அவர்களை ஆக்கிரமித்தே உள்ளது.சமாதான சமிக்ஞைகளை அரசியல் சுயநலத்தோடு பார்க்கிறார்கள் - குழம்பிய குட்டையில் அதிக மீன்பிடிக்கலாம் என அவர்களின் அரசியல் ஞானம் அவர்களுக்கு அறிவுறுத்துகிறது.

தொடர்ந்தும் - இருண்ட இரத்த வாடை வீசும் 'ஆடி' கலவர ஆட்டத்தையே ஆடவிரும்புகிறார்கள் போல் தெரிகிறது. இந்த சமாதான - புரிந் துணர்வுக் காலத்திலும் சந்திரிகாவின் பேச்சுக்கள் - ஜே.வி.பி.-சிகல உறுமய கட்சிகளின் நடவடிக்கைகள், படைதரப்பு நகர்வுகள் என எல்லாமே 'ஆடி'மாத அவலத்தையே நினைவூட்டுவதாக இருக்கிறது.



விபரீத புத்தி நாசத்தையே விளைவிக்கும் என்ற பகவத் கீதை கூறும் வார்த்தைகளை இந்த நாளில் பேரின வாத சமுகத்திற்கு கூறிவைப்பது பொருத்தமானதாகவே இருக்கும்.

# பிரதமர் ரணிலின் அரசாங்கத்திற்கு எதிராக அரசியல் யுத்தம் நடத்த சந்திரிகா முடிவு

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சனாதிபதி சந்திரிகாவிற்கு எதிராக குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. அதற்கு முன்னர் ரணிலின் அரசிற்கு எதிராக ஒரு கடுமையான அரசியல் யுத்தம் ஒன்றை நடத்த சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்.**

சனாதிபதிக்கு மிகவும் நெருக்கமான வட்டாரம் ஒன்று இத் தகவலை விடுத்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அரசாங்கமானது இந்த வாரத்தில் சனாதிபதியின் நிதிமோசடிகள் மற்றும் நிதி துஸ்பிரயோகம் சம்பமந்தமாக அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக ஊடகத்துறை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



அரசாங்கத்தின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு சந்திரிகா பல தந்திரோபாயங்களை திட்டமிட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் டி.எம். ஜெயரட்ணாவையும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவையும் அழைத்து பொதுசன ஐக்கிய முன்னணி நாடாளும்ன்ற உறுப்பினர்கள் எவரையும் வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதிக்க வேண்டாமெனவும் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளோரை உடன் திரும்பி வருமாறு அழைப்பு விடுக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக தெரியவருகிறது.

# பலாலி விமானத்தளத்தை அண்டிய பகுதி பாதுகாப்புவலயமாக பிரகடணப்படுத்த முடிவு

## அரசதரப்பு தீர்மானம்

பலாலி விமானத் தளத்திலிருந்து அரை மைல் தூரத்தை பாதுகாப்பு வலயமாக பிரகடணப்படுத்தி ஏனைய இடங்கள்ள மக்களிடம் மீளக்கையளிக்க சிறிலங்கா அரச தரப்பு முன்வந்திருப்பதாக தெரிய வருகிறது.

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்துக் காலச்சார அமைச்சர் மகேஸ்வரன், படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ ஆகியோர் கலந்து கொண்ட மாநாட்டில் இது தொடர்பான முடிவு எட்டப்பட்டதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குப்பிளான், கட்டுவன், வசாவிளான், தெல்லிப்பழை, கீரிமலை, சேந்தாங்குளம், அச்சுவேலி ஆகிய பிரதேசங்க ளைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்ப டுவார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது.

இது தொடர்பான வரைபடம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் செல்லும் படைத்துறை அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணான்டோ இது தொடர்பாக ஆராய்வார் எனவும் மேலும் தொவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிக்கும் போது:

சிறிலங்காப் பிரதமருடன் இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னோடியாக கடந்த 15 நாட்களுக்கு முன்பு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு விஜயம் செய்து அந்தப் பிரதேசங்களில் இன்னன்ன பகுதிகளை விடுவித்து மக்களை குடியேற்றலாம் என வரைபடம் ரீதியாக பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதில் குறிப்பாக மாவட்டபுரம், கொல்லங் குறிச்சி, தொல்லிப்பழை, குப்பிளான் மற்றும் அச்சுவேலி பகுதிகளிலும் இதற்கு மேலாக மயிலிட்டிப் பிரதேசத்திலும் பலாலி விமானத் தளத்திலிருந்து அரை மைல் சுற்றாடல்களை தவிர்த்து ஏனைய பகுதிகளில் மக்கள் குடியமர்வதற்கு ஏற்ற ஒத்துழைப்பை நல்குவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் அதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்கி அங்கே இருக்கின்ற படைத்தரப்புடன் கலந்தாலோசித்து ஏற்ற நிலையை ஏற்படுத்தும் முகமாக எதிர்வரும் சனிக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் யாழ்ப்பாணம் வரவுள்ளார் எனவும் தெரிவித்தார்.

# வை.கோ.வின் கைதைக் கண்டித்து மட்டக்களப்பில் கண்டனப் பேரணி

விடுதலைப்புலிகளைத் தொடர்ந்து ஆதரித்துவரும் திராவிட முன்னேற்ற கழகப் பொதுச்செயலர் வை.கோவை தமிழக அரசு சிறையில் அடைத்து வைத்துள்ளதை கண்டித்து நேற்று மட்டக்களப்பில் கண்டனப் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றுள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், பொதுநிறுவனங்களும் இணைந்து இந்த வெகுசனப் போராட்டத்தை ஒழுங்க செய்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டனப் பேரணியின் பின்னர் கண்டனக் கூட்டம் நேற்றுக்காலை அமிர்தகாளி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொது அமைப்பு பிரதிநிதிகளும் மக்கள் பிரதிநிகளும் அங்கு கண்டன உரைகளை நிகழ்த்தியுள்ளனர்.

இக்கண்டன பொதுக்கூட்டத்தின் போது இந்திய பிரதமருக்கான மனுவை தமிழ்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராச சிங்கம் மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் எஸ்.சண்முகத்திடம் கையளித்தார்.

மட்டக்களப்பு கல்குடா தொகுதியிலும் இன்று இது போன்ற கண்டனப்பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் இப்பேரணி நடைபெறவுள்ளது. ம.தி.மு.க. பொதுச்செயலர் வை.கோவை தமிழக அரசு கைதுசெய்து சிறை வைத்துள்ளமையைக் கண்டித்து மன்னாரிலும் நேற்றுக் கண்டனப் பேரணி நடைபெற்றுள்ளது. மன்னர் செபஸ்டியான் பேராலயத்திலிருந்து ஆரம்பமாகிய இப் பேரணி மன்னார் அரச செயலகம் முன்பாக முடிவடைந்தது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை மன்னார் அரச அதிபரிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளார்.

இம்மனுவின் பிரதிகள் இந்திய பிரதமரிற்கும், தமிழக முதல்வருக்கும் ஐ.நா. பொதுச்செயலாளருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

# நோர்வே தூதுவருடன் அமைச்சர் பீரிஸ் பேச்சு

இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக சிறிலங்கா அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேக்குடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்..

கடந்த திங்கட்கிழமை லண்டனில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்சன், நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்கெய்ம் ஆகியோர் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இதன் போதே தாய்லாந்து பேச்சுக்கான திகதி குறித்து நோர்வேத்தரப்பால் தெரிவிக்கப்பட்ட போதும் போர் நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கலின் பின்னரே பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமென அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையிலேயே இது தொடர்பாக நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேக்குடன் விரைவான பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பான விபரங்கள் எதுவும் வெளிவராத போதும் இவர்கள் தாய்லாந்து பேச்சுக்களை விரைவாக ஆரம்பிப்பது தொடர்பாகவே பேசியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிலாந்தன்

# சமாதானத்தின் ஆயுள்

யுத்த நிறுத்தம் வந்து சற்றேறக்குறைய ஏழுமாதங்களாகிறது. ஈழப்போரின் இதுவரையிலுமான எல்லா யுத்த நிறுத்தங்களிலும் இதுதான் மிக நீண்டது. ஒப்பீட்டளவில் இம்முறை சமாதானத்தின் ஆயுள் ரேகை சற்றுப் பலமானது போலவே தோன்றுகிறது.



ஆனால் யுத்தத்தை விடவும் சமாதானந்தான் ருசியானது என்று நிரூபிக்க இந்த ஏழு மாதங்களும் போதாது.

சுமார் கால்நூற்றாண்டு கால யுத்தம் இது. யுத்த நிறுத்தமே சமாதானம் என்றாகி விடாது.

ஏற்கனவே இப்பத்தியில் கூறப்பட்டது போல யுத்த நிறுத்தத்தை சமாதானமாகக் கனியச் செய்வதே இப்பொழுதுள்ள பிரதான சவால்.

ஆனால் அதற்கொரு விஞ்ஞான பூர்வமான வேலைத்திட்டம் வேண்டும்.

ஒரு நிரந்தரத்தீர்வுக்கு வருவதில் உடனடிப் பிரச்சினைகள் இருந்தால் குறைந்த பட்சம் ஒரு இடைக்காலத்தீர்வுக்காவது வருவதே உசிதமாயிருக்கும்.

யுத்தத்திலிருந்து சமாதானத்துக்கு பண்புமாற்றம் பெறவேண்டிய இடைமாறு காலகட்டங்கள் எல்லாவற்றின்போதும் எல்லா நாடுகளிலும் இப்படியொரு இடைக்கால நிர்வாக அமைப்புத்தான் அதிகம் பயன்பொருத்தமானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

அப்படியொரு இடைக்கால நிர்வாக அமைப்பை நிறுவுவதன் மூலம் யுத்தமில்லாத சில வருடங்களை உருவாக்கி அதற்குள் தென்னிலங்கையில் உள்ள யுத்தத்துக்கு ஆதரவான சக்திகளை வீரியமிழக்கச் செய்துவிட்டால் பிறகு இலகுவாக ஒரு இறுதித்தீர்வை நோக்கி நகர முடியும் என்று சில விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் அதற்கு வீரம், விவேகம், தீர்க்கதரிசனம் மிக்க ஒரு சிங்களத்தலைவர் வேண்டும்.

தான் அப்படியொரு ஆள்தான் என்பதை நிரூபிக்க கடந்த ஏழு மாதங்களும் ரணிலுக்குப் போதாதுதான்.

சுமார் கால் நூற்றாண்டு காலப் பிரச்சினைக்கு ஏழுமாதங்களில் அதிரடியாகத் தீர்வுகாண முடியாது.

ஆனால் இழுபட்டு இழுபட்டு நிறைவேற்றப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னணியில் அரசாங்கம் சமாதானக் கார்ணிவெல் நடாத்திக் காசு சம்பாதிக்க முயல்கிறதா என்ற தமிழர்களின் ஐயத்தை ரணில் புறக்கணித்து விட முடியாது.

சுமார் கால் நூற்றாண்டுகால யுத்தம் இலங்கைத்தீவின் ஒவ்வொரு பிரஜையையும் 83,000 ரூபா கடனாளியாக்கியுள்ளது.

இந்தக்கடன் சுமையிலிருந்து கொழும்பு எப்படியாவது மீண்டாக வேண்டும்.

எனவே இதனடிப்படையில் கூறினால் சமாதானம் எனப்படுவது ஒரு வகை வியாபாரம்தான்.

யுத்தமும் வியாபாரம்தான். ஆனாலது குருதி சிந்தும் வியாபாரம். சமாதானம் குருதி சிந்தாத வியாபாரம்.

எதில் அதிக லாபம் என்பதே இங்கு சமாதானத்தின் ஆயுளைத் தீர்மானிக்கிறது.

இதில் இன்னுமொன்று முக்கியமானது. சமாதானம் ஒரு வியாபாரம் மட்டுமல்ல, அது அறிவு பூர்வமான ஒரு விஞ்ஞானமும் கூட.

யுத்த நிறுத்தத்தில்தொடங்கி அது அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்த்துச் செல்லப்பட வேண்டும்.

சில சமயம் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டால் இப்பொழுது நிலவும் சுமுகநிலை கூட முறிந்து போகக்கூடும் என்பதால் தான் பேச்சுக்கள் பின் போடப் பட்டு வருகின்றன என்றும் சில தரப்புக்களில் கூறப்படுகிறது.

எனவே யுத்தமில்லாத தீர்வு ஒன்றைப் பற்றிச் சிந்திக்கும் எவரும் இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றுதான் யுத்தநிறுத்தத்தை அடுத்த கட்டத்திற்கு உயிர்துடிப்பான விதத்தில் நகர்த்தும் என்று கூறுகிறார்கள்.

இடைக்கால நிர்வாக அமைப்பு எனப்படுவது ஈழப்போரில் புதியது அல்ல..

ஏற்கனவே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டது.

பிறந்த உடனேயே இறந்துபோன அவ்வமைப்பு ஒரு சிசேரியன் குழந்தைதான்.

பல தடைகளை அது தாண்ட வேண்டியிருந்தது. பிராந்திய நலன்களோடு வந்த இந்தியா அதை ஒரு பொறியாகப் பாவிக்க முயன்று கொண்டிருந்த ஜெயவர்த் தனவோ அந்தப் பொறிக்குள் இந்தியாவையும் தள்ளிவிடச் சூழ்ச்சிகள் வகுத்தார். முடிவில் பொறிக்குள் சிக்கியது இந்தியா. இடைக்கால நிர்வாகசபை இயங்காமலேயே இறந்துபோயிற்று.

ஈழப்போரின் முதலாவது இடைக்கால நிர்வா கசபை அது ஜெயவர்த்தனவின் சூழ்ச்சிகளும் டிக்சிற்றின் திமிரும் பொறுப்பின்மைகளும் இவற்றோடு தமிழர் தரப்பில் புலிகளைத்தவிர வேறு சக்திகள் கையாளப்படத்தக்கவைகளாகக் காணப்பட்ட ஒரு நிலையும் சேர்ந்து ஈழப்போரின் முதலாவது இடைக்கால நிர்வாக அமைப்பைப் பரிசோதிக்காமலேயே கைவிடச் செய்தன.

இம்முறை அப்படியல்ல பிராந்திய நலன்கள் அற்ற அனுசரணையாளராக நோர்வே வந்திருக்கிறது. சமாதானத்தை ஆகக்கூடிய பட்சம் விஞ்ஞானபூர்வமாக அணுக இது ஒரு பலமான அடிப்படை.

மற்றது முன்பு ஐ. பி. கே. எவ், காலத்திலிருந்த பல பிரச்சனைகள் இப்பொழுது இல்லை. குறிப்பாக ஈழப்போர் வரலாற்றில் புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முதலாவது யுத்தநிறுத்தம் இது என்பதால் முன்பு தோன்றிய பிரச்சினைகள் எதுவும் இப்பொழுது எழுதுவதற்கில்லை.

இதில் கையாளப்பட வேண்டிய உணர்ச்சிகரமான ஒரு விவகாரம் முஸ்லிம்களின் விவகாரம்தான். அன்றைக்கு அதிகம் வளர்ச்சி பெற்றிராததும் இன்றைக்கு பெருவளர்ச்சி கண்டிருப்பதுமான முஸ்லிம்பிர நிதித்துவம் தொடர்பாக அதிகம் விஞ்ஞானபூர்வமாக அணுக வேண்டியிருக்கும்.

ஆனால் இதைவிடச் சிக்கலான வேறொரு பிரச்சனை உண்டு. ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பைப் உருவாக்குதில் கொழும்பிற்கு இடறலாயிருக்க கூடிய விவகாரம் அது.

இது பற்றி ஏற்கனவே கொழும்பு பத்திரிகைகள் பெரிதாக பிரஸ்தாபிக்கத் தொடங்கி விட்டன.

அது என்னவெனில்--புலிகளிடம் ஏற்கனவே நன்கு ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சிவில் நிர்வாக கட்டமைப்பு உண்டு என்பதுதான்.

அதிலும் குறிப்பாக சட்டம் ஒழுங்கைப் பேணவும் பாதுகாக்கவும் என்று நீதிமன்றும் காவல்துறையும் உண்டு. இவை இரண்டையும் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பிற்குள் எப்படி உள்வாங்குவது என்பது பற்றியே அதிகம் புதிதாகவும் விஞ்ஞான பூர்வமாகவும் சிந்திக்க வேண்டியிருக்கும்

இதில் கண்டுபிடிக்கப்படும் தீர்வுகள் பின்னாளில் நிரந்தரத் தீர்வுக்குரிய அடிப்படைகளாகவும் அமையக்கூடும்.

இதிலொன்றை முக்கியமாக கவனிக்க வேண்டும். புரிந்துணர்வு உடன்படிக்கை புலிகளின் படைபலத்தையும் ஆட்சிப்புலத்தையும் அங்கீகரிக்கிறது.

இதை இன்னும் சரியா சொன்னால் அது புலிகளின் படைபலத்திற்கும் ஆட்சிப்பலத்திற்கும் ஒரு சட்ட அந்தஸ்தைக் கொடுக்கிறது எனலாம். ஈழப்போரில் முன்னெப்பொழுதும் இப்படியொரு கட்டம் வந்ததில்லை.

எனவே இந்த இடத்திலிருந்து அடுத்தடுத்த கட்டங்களுக்கு முன்னேறுவது அப்படியொன்றும் சிரமசாத்தியமானது அல்ல.

எல்லாவற்றிற்கும் ஒரு விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை தேவை அவ்வளவுதான்.

உண்மையில் சமாதானம் எனப்படுவது ஒரு விமானம் பறப்பதை ஒத்த நிகழ்ச்சி.

இதில் முதலாவது ஓடும் காலம் விமானம் ஓடுபாதையில் விரைந்தோடி வேகமெடுக்கும் இது புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலம்.

அடுத்த மேலெழு நிலை இதில் விமானம் மேலும் வேகமெடுத்து தரையிலிருந்து வானுக்கு மேலெழும் இது இடைக்கால நிர்வாக காலம் அதாவது இடைமாறுங். காலம்.

முடிவில் பறத்தல் இங்கே விமானம் வானில் பறக்கும் அதாவது பேச்சுவார்த் தைகள் மூலம் ஒரு தீர்வுக்கு வருதல்.

இலங்கைத்தீவின் சமாதானத்தைப் பொறுத்தவரை விமானம் இப்பொழுதும் ஓடுபாதையில்தான் அதுவும் மிக மெதுவாக நகர்ந்தபடியுள்ளது.

இனி வேகமெடுத்து மேலெழ வேண்டும். அதற்கு இடைக்கால நிர்வாக அமைப்பொன்றைப் பற்றிச் சிந்தித்தால் தான் உண்டு. அப்பொழுதுதான் சமாதானம் 'கியரை' மாற்றிக் கொண்டு மேலெழும்.

இந்த ஒரு தத்தைக் கட்டாயமாகத் தாண்ட வேண்டியிருக்கும்..


அப்படியென்றால் தான் யுத்தமில்லாத சில வருடங்களையாவது பேணலாம்.

அதன் மூலம் சமாதானத்திற்கு மிக வாய்ப்பான ஒரு இடைமாறு காலத்தைக் கனிய வைக்கலாம்.

இல்லையேல் -யுத்த நிறுத்தம் இழுபட்டு இழுபட்டுச் சென்று ஒரு கட்டத்தில் இறுகிப்போய் நின்று விடும். ▫

## பிரமுக அறிமுகம்

### கே.எம்.பி.ராஜரத்னாவை



முன்னாள் பாராளுமன்ற பிரதிநிதி, இந்நாள் "சிகல உறுமய" என்ற பௌத்த சிங்கள பேரினவாதக் கட்சி யின் பிரமுகர். கடந்த தேர்த லின் போது சிகல உறுமய தனது தேசியப் பட்டியலில் இவருக்கு இடமளித்ததன் மூலம் இவருக்கு அரசியல் மறுவாழ்வுக்கான மார்க்கத் தைக் காட்டியது. சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு ஒரு நீண்ட பெரும் வரலாறு உண்டு. அந்த வரலாற்றை முன்னெடுத்த முன்னோடிகளில் கே.எம்.பி.ராஜரத்னாவையும், அவரது மனைவியான குசுமா ராஜரத்னாவையும் யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது. குறிப்பாக தமிழ் மக்கள் மறக்கவும் கூடாது.

முன்னாள் இடதுசாரிப் பத்திரிகையாளர் ஒருவரால் அவரது 'தீப்பொறி' பறந்த பத்திரிகையில் முதல் பக்கத்திலேயே 'வெலிமடை மடையன்' என்று பகிரங்கமாக வர்ணிக்கப்பட்ட ராஜரத்னா வெலிமடைத் தொகுதியின் ஆரம்பகால பாராளுமன்ற உறுப்பினராவார்.

இவரது மனைவியான குசுமா ராஜரத்னா ஊவா பரணகம தொகுதியின் உறுப்பினராக விளங்கியவர்.

இரண்டுபேர்களை மட்டுமே கொண்டதாகத் தெரிந்த இவரது கட்சியில் இரண்டுபேரான கணவனும் மனைவியும் போட்டியிட்டு இரண்டுபேரும் வென்று பிரதிநிதித்துவம் செய்தவரலாறு இவர்களுக்குண்டு.

இப்போது 'ஜே.வி.பி' என்ற ஜனதா விமுத்தி பெரமுனை என்ற சிங்கள, பௌத்த,இடதுசாரிப் பேரினவாதக்கட்சி இருப்பது என்று. 1950 முதல் 70 வரையிலான காலப்பகுதியிலும் ஒரு 'ஜே.வி.பி' கட்சி சிறிலங்காவில் இருந்தது. அதன் முழுப்பெயர் 'ஜாதிக விமுக்தி பெரமுன' என்பதாகும்.

இக்கட்சியே கே.எம்.பி.ராஜரத்னாவின் தலைமையில் இனவெறியை சிங்கள மக்கள் மத்தியில் போதித்த கட்சியாகும்.

1958ம்ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் பின்னணியில் இவரது இனத்துவேஷப் பேச்சு முக்கியபங்காற்றியது.

ஈழத்தமிழர் வரலாற்றில், மிகவும் மோசமான, தமிழ் மக்களின் உணர்வுகளைச் சிலிர்க்க வைத்த முக்கிய வார்த்தைகளான 'தமிழ் மக்களின் தோலில் செருப்புத் தைத்து போட்டால்தான் என் ஆத்மா சாந்தியடையும்' என்ற சொற்றொடரை இரத்தவெறியுடன் ,இனவெறி கலந்து கக்கிய 'விஷநாக்கு'க்குஉரியவர் இதே ராஜரத்னாதான்.

1952ல் முதன் முதல் பண்டாரநாயக்காவால் ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடுவதன் மூலம் அரசியலில் நுழைந்த இவர் முதலில் சந்தித்தது தோல்வியையேயாகும். ஆனால் பின்னர் 1956ல் வெற்றியைப்பெற்று பாராளுமன்றம் நுழைந்தார்.

சிங்கள மொழியை அரசகரும மொழியாக்குவதும், சிங்கள பௌத்தர்களின் உரிமையைப் பாதுகாப்பதும் தான் இவரது ஒரே வெறித்தனமான குறிக்கோள்.

1957ல் தமிழரசுக் கட்சி தந்தை செல்வா தலைமையில் 'திருமலை' யாத்திரை என்றபிரபலமான நடவடிக்கையொன்றை மேற்கொண்டபோது அதனைத் தடுத்து நிறுத்துமாறு பண்டாரநாயக்காவிடம் இவர் வலியுறுத்தியபோதும் 'பண்டா' அவ்வாறு செய்யாது விடவே சி.ல.சு. கட்சியிலிருந்து வெளியேறி முதலாம் ஜே.வி.பி.யை உருவாக்கினார்.

மலையகத் தமிழர்களை உடுத்த உடையுடன் நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்பது இவரது மற்றொரு பிரசித்தி பெற்ற கோஷமாகும்.

'சிகல உறுமய'கட்சியால் மட்டுமே சிங்கள பௌத்தரின் உரிமைகளைக்காக்க முடியும் எனத் தான் நம்புவதாகக் கூறும் ராஜரத்னா பிரபாகரனின் தமிழீழக் கனவை சிதறடிக்க சிங்கள பௌத்தர்களின் சிகல உறுமயவின் பின்னால் அணிதிரள வேண்டும் என்கின்றார்.

வடக்கு கிழக்குடன் மட்டும் புலிகள் நின்று விடப்போவதில்லை . மலையகத்தையும் ஆக்கிரமிக்கும் திட்டம் அவர்களுக்கு உண்டு. அந்த நிலைவரும் போது சிங்களவர்கள் கடலில் தான் போய் விழவேண்டும் என இந்த தள்ளாத வயதிலும் தளராத இனவாத விஷம் கக்குகின்றார்.

ஐ.தே.கட்சியின் தீவிர எதிர்ப்பாளரான இவர் பொ.ஐ.மு உட்பட பிரதான கட்சிகள் எதுவுமே சிங்களக் கட்சிகளோ பௌத்த விசுவாச கட்சிகளோ அல்ல என்கிறார் ...

கடைசிக்காலத்திலும் பதவிஆசையுடன் இனவாதம் பேசமுன்வந்த இவரது நுழைவுக்குப்பின் இவரது ' சிகல உறுமய'இருந்த ஒரே ஆசனத்தையும் இழந்து விட்டது.

இவரது ஆத்ம சாந்திக்கான விருப்பமும் தூரத்துப் பச்சையான நிலையில் உள்ள ராஜரத்னாவை சிங்களவர்கள் ஏறத்தாழ மறந்துள்ள நிலையில் தமிழர்களால் மறக்கப்படக்கூடாத ஒருவராகவே இருக்கின்றார். ◎

# தமிழர் தாயகத் தலைநகர் திருகோணமலை

## - சில குறிப்புகள்

அ. அன்ரன் அன்பழகன்

அன்னை தினம் நடந்து
தளர்வுற்றாள்
எனத்துயறுற்று
நிலம் பிழந்து
உனைச் சுமந்து செல்ல
முயன்றான்.
பத்துத் தலை கொண்ட
இராவணேசன்
ஒரு தலை பறித்துத்
துண்டித்தாட
அவனோ சிவபக்தன்
கோணேசப் பெருமானே.
நானூறு ஆண்டுகள்,
Ford Fedevick
கற்குகையில்
கைதியாய் எப்படி
நீ காத்திருந்தாய்
கை கட்டி, வாய் பொத்தி
காத்திருத்தல் துறந்துவிட்டு,
கோணமலை எங்கும்
கொடிபறக்க,
எப்போது நீ
எங்கள் தலைநகரில்
வீதி வலம் வருவாய்?

வடக்கு கிழக்குத் தமிழர் தாயகத்தின் தலைநகர் திருகோணமலை என மாகாண அவை ஏற்பாடுகளில் கூறப்பட்ட போதும் அது தமிழர் தம் தலைநகராக இன்றும் உணரப்படவில்லை. இன முரண் தெறிப்படையும் சம்பவங்களும், படையினரின் கெடுபிடிகளும் என பல சம்பவங்களைப் பட்டியலிட முடியும்.


அண்மையில் தொடர்ச்சியாக நடைபெறும் வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையேயான பெரு விளையாட்டு, மெய்வலுனர் போட்டிகளுக்கு என வட பகுதியில் இருந்து பெருமளவு மாணவர்கள் கலந்துகொண்டனர் கடந்த மாதப் பௌர்ணமி தினத்துக்கு மிகப்பிரமாண்டமான அலங்கார வளைவு ஒன்று பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள சந்தையில் அமைக்கப்பட்டிருந்தது. அமைதியும், சாந்தமும் அன்பும் நிறைந்த புத்த பெருமானின் வழிபாடு தமிழர்க்கும் ஏற்புடையது. திருகோணமலை வெல்கம் ரஜமகாவிகாரை "நந்தனார் கோவில்" என மிக நீண்ட காலம் தமிழர்களாலும், தமிழ்ப் பௌத்தர்களாலும் போற்றி வழிபடப்பட்டதை (8ம்,14ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில்) வரலாறு கூறுகிறது. பொசனுக்கான அலங்கார வளைவு அமைக்கப்பட்டது இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் செயல் அல்லவெனினும், கரும்புலிகள் நினைவை கொண்டாட ஒரு சிறு அலங்கார வளைவைக்கூட விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்கு வெளியே அமைக்க முடியாது இருந்த சூழ்நிலையே திருகோணமலையின் இன முரண்பாட்டின் இறுக்கத்துக்கு சாட்சியமாய் இருந்ததை உணரமுடிந்தது.

தமிழர் தாயகக் கோட்பாட்டினைச் சிதைக்கும் நில அபகரிப்பின் மையமாக திருகோணமலையே இருந்தது. 1881 ஆம் ஆண்டின் குடித்தொகை கணக்கீட்டின் இனவிகிதா சாரத்துக்கும், 1981ஆம் ஆண்டின் குடித்தொகை இனவிகிதா சாரத்துக்கும் இடையேயான பாரிய வேறுபாடே இதற்கான சாட்சியமாகும். கந்தளாய், அல்லை, மொறவேவ, பன்குளம்,சேருவில என தொடர்ந்த குடியேற்றங்களோடு அபயபுர, ராஜசிய என நகரப்பகுதிகளுக்குள் இடம்பெற்ற குடியேற்றங்கள் வரை நிலப்பறிப்பின் சாட்சியங்கள் ஆகும்.

இன்றும் கூட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்பும் நிலப்பறிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை என்பது சமாதான செயற்பாட்டின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. இப்போது கூட கபறண, மொறவேவ (முன்பு முரலிக்குளம்), கந்தளாய், கெப்பிற்றிக் கொலாவ பகுதிகளில் இருந்து திருகோணமலை நோக்கிய குடியேற்றத் திட்டங்கள் தொடர்கின்றன. அண்மையில் ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய அமைச்சர் ஒருவர் கபறணவில் அறுநூறு வீடுகளைக் கட்டி, படையில் இருந்து ஓய்வு பெற்றவர்களைக் குடியேற்றியுள்ளார் என திருகோணமலையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் ஒருவர் தெரிவித்தார். வடக்குக் கிழக்கு நிர்வாக அலகுக்குள் திருகோணமலை உட்படுத்தப்படுமா என்பதே பெரும் கேள்வியாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார். பன்குளப்பகுதியில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் மீளக் குடியமரவில்லை. இது தொடர்பான எந்த நடவடிக்கையும் கூட மேற்கொள்ளப்படவில்லை. திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் குடியமர்த்தப்படுவார்களா என்பதே கேள்விக்குறியாகவுள்ளது.

இலங்கையில் கொழும்புக்கு அடுத்த படியான பெருநகரமாக வளரக் கூடிய சாத்தியம் திருகோணமலைக்கே இன்றும் உண்டு. துறைமுகம் மட்டுமல்ல, சர்வதேச விமானத்தளம், கைத்தொழில் நகரமாவதற்கான அடிப்படை வசதிகள், தென் கிழக்காசிய பொருளாதாரத்தை கட்டுப்படுத்தக் கூடிய கேந்திர முக்கியத்துவம் எல்லாம் திருகோணமலைக்கு உண்டு. இதனால் தான் திருகோணமலையை வடக்குக் கிழக்கு தலைநகரமாக அங்கீகரிக்க சிறிலங்கா அரசு முன்வருமா எனும் கேள்வி எழுகிறது.

யாழ்ப்பாணம், வவுனியாவில் கரும்புலிகள் நாள் சிறப்பாக



எழுச்சிபூர்வமாக அலங்கார வளைவுகள், ஊர்வலங்களோடு படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொண்டாடப்பட்டது. ஆனால் திருகோணமலையைப் பொறுத்தவரை படையினரில் ஒரு பகுதியினரில் ஒரு பகுதியினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு விரோதமாக புலிகள் இயக்கஉறுப்பினர்களான விமல், இசைக்குயில், அழகன் ஆகியோரை சம்பூருக்கும் உப்பாறுக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து கடற்படையினரும், சபேசன், வஞ்சி ஆகிய இருவர் கன்னியாவில் வைத்து இராணுவத்தினரும் கைது செய்துள்ளனர். இவ்வாறு படையினரின் கெடுபிடிகளும் அதிகமுள்ள ஒரு மாவட்டமாக திருகோணமலை இன்றுள்ளது.

மூதூர், வாழைச்சேனைப் பகுதிகளில் ஏற்பட்ட இன வன்முறைகளுக்கு அடித்தளத்தில் நின்றவர்கள் முன்னாள் முஸ்லீம் காங்கிரஸ் உறுப்பினர்களாக இருந்து இன்று பெரும்பான்மைக் கட்சிக்குள் தம்மை இணைத்துக் கொண்டவர்களின் கையாட்களே என அடையாளம் கா்ணப்பட்டதாய் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யுத்த செலவுக்காகப் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த 1360 கோடி ரூபா தேவை என தெரிவித்த பிரதமர் ரணில் விக்ரம சிங்க இதனைத் திருப்பி செலுத்த 2008ஆம் ஆண்டு செல்லும் எனவும் தெரிவித்துள்ளார். நாட்டின் மொத்தக் கடனையும் செலுத்த 32,700 கோடி ரூபா தேவை எனத் தெரிவித்த அவர் யுத்தத்தை தொடர்தல் என்பது நாட்டை மேலும் அழிவுக்கே இட்டுச் செல்லும் என்பதனையும் தெரிவித்துள்ளார். யுத்தத்துக்கும்அபிவிருத்திக்குமான கயிறிளுவையில் யார் வெற்றி பெறுவார்கள்என்பதை காத்திருந்து தான் பார்க்க வேண்டும். ○

---

### புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி

# நூறு நாட்கள் கடந்த பின்னர் கிழக்கில் இயல்புநிலை தோன்றியுள்ளதா?

திருகோணமலை நகருக்கு வடக்கே கடற் கரைப் பகுதித் தமிழ்க் கிராமங்களின் பாதுகாப்பு சிறிலங்காக் கடற்படையினரின் பொறுப்பில் இருக்கின்றது. சாம்பல்தீவு, சல்லி, நிலாவெளி, இறக்கக்கண்டி, கும்புறுப் பிட்டி,குச்சவெளி, புடவைக்கட்டு, புல்மோட்டை போன்றவை தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற கிராமங்கள். இக்கிராமங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகக் குச்சவெளிப் பிரதேசச் செயலர் பிரிவு அமைந்துள்ளது. கட்டுக்குளம் பற்றுக் கிழக்கு என்று இப்பகுதி அழைக்கப்படுகின்றது.

அங்கு எங்கும் கடற்படையினரின் முகாம்கள் காணப் படுகின்றன.இம் முகாம்களைப் பலப்படுத்தும் வேலைகளைத் தற்போது கடற்படையினர் மேற் கொண்டு வருகின்றனர். காவலரண்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. மண் சாக்குகள் அடுக்கப்பட்டு வருகின்றன. காலை தொடக்கம் மாலை வரை கடற்படையினர் ஊர்மனைகளுக்குள் சென்று தமிழ் பொது மக்களை மறித்துச் சோதனை நடத்துகின்றனர். விசாரணை நடத்துகின்றனர். யாரைச் சந்திக்கச் சென்று கொண்டிருக்கின்றீர்கள் என்று மக்களைக் கேட்கின்றனர். துருவி துருவி விசாரிக்கின்றனர்.

தமிழ் மக்கள் பயந்து மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இரவு வேளைகளில் தமிழ் மக்கள் தங்களின் நடமாட்டத்தைக் குறைத்து வருகின்றனர். கடற்படையினரின் இந்த அச்சுறுத்தல் நடவடிக்கையின் நோக்கம் என்னவாக இருக்கும்? யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் முகாம்களைப் பலப்படுத்தும் வேலைகளைப் படையினர் மேற்கொள்வது இப்பகுதி வாழ் தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் குச்சவெளிப் பிரதேச அரசியல் அலுவலகம் ஒன்று நிலாவெளிக் கிராமத்தில் கோபாலபுரம் பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கீழ் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் கடற்படையினர் குச்சவெளிப் பகுதியில் அரசியல் நடவடிக்கைகளை அவர்கள் சீராக மேற் கொள்ள விட்டு வைப்பதாக இல்லை. அவர்களையும் வீதியில் வாகனத்தில் செல்லும் போது வழிமறித்து விசாரிக்கின்றனர். இரவு நேரத்தில் திருகோணமலை-குச்சவெளி வீதியில் பொதுமக்கள் வாகனங்களில் அல்லது வேறு வழிகளில் செல்லும் போது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் செல்ல வேண்டியுள்ளதாக முறைப்படுகின்றனர். நிலாவெளிக்குச் செல்லும் வீதியில் ஆத்திமோட்டை என்ற குக்கிராமம் உள்ளது. அங்குள்ள மலையின் உச்சியில் முருகன் கோவில் ஒன்று இருக்கின்றது. அந்தப் கோவிலில் கடற்படையினர் முகாம் வைத்துள்ளனர். பக்தர்கள் செல்ல முடியாதுள்ளது. இரவு வேளைகளில் மலை உச்சியில் இருக்கும் கடற்படையினர் வீதியால் செல்லும் வாகனங்கள் மீது டோர்ச்லைட் வெளிச்சம் அடித்துப் பார்ப்பார்கள்

திருகோணமலையின் வடக்கே கடற்படையினரின் கெடுபிடி அதிகரிக்கக் காரணம் என்னவாக இருக்கும்? அப்பகுதி தமிழ் மக்களின் வாழ்க்கையில் தற்போது அமுல் நடத்தப் பட்டு வரும் யுத்தநிறுத்தம் இயல்பு நிலையை ஏற் படுத்தி விட்டதா? அன்றாடக்காய்ச்சிகளாக வாழும் அப்பகுதி மக்களின் வாழ்வில் தற்போதைய யுத்த நிறுத்தம் இன்னும் அமைதியை ஏற்படுத்த வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். திருகோணமலை நகரின் பல இடங்களில் இன்னும் பொலிசாரின் சோதனைச் சாவடிகள் இருக்கத்தான் செய்கின்றன. பொது மக்களை மறித்துச் சோதனை நடத்தப்படுவது இச்சோதனைச் சாவடிகளில் மேற்கொள்ளப் படவில்லையாயினும் சாவடிகள் இருக்கின்றன. அவற்றில் பொலிசார் தங்கியுள்ளனர். தற்போது நடைமுறையில் இருக்கும் யுத்தநிறுத்த உடன்பாட்டின்படி, மக்கள் நெருக்கமாக வாழுகின்ற நகரங்கள் மற்றும் பட்டிணங்களில் இருக்கும் சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். மக்களுக்குச் சிரமம் கொடுக்காத விதத்தில் இச் சோதனைச் சாவடிகளை அகற்ற வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. யுத்தநிறுத்தம் நடை முறைக்கு வந்து நூறு தினங்கள் கடந்து விட்டன. என்றாலும் அரச படையினரின் கெடுபிடிகள் குறைந்த பாடாக இல்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் உண்மை அர்த்தத்தைச் சாதாரண சிங்கள மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். ஆனால் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச படையினர் மட்டும் இன்னும் புரிந்துகொள்ள முடியாது இருக்கின்றனர்.

**- நாதன்**

அரசாங்கமும் அரச படையினரும் ஓர் உண்மையை இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. தற்போதைய சமாதான முயற்சி தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பதை அரசும் அரச படையினரும் ஒருதரம் சிந்தித்துப் பார்த்தால் இப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த ஒரு சில தினங்களில் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்த அறிவிப்பை வெளியிட்டதுடன் அதனைக் கடைப் பிடிக்கவும் ஆரம்பித்தனர். அதன் பின்னர் அரசாங்கம் பதிலுக்கு யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடிக்கப் போவதாக அறிவித்தனர்.

உண்மையில் தற்போதைய சமாதான முயற்சிக்கு வித்திட்டவர்கள் என்று விடுதலைப் புலிகளைத்தான் கூற வேண்டும். இந்தக் கருத்தை செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை மீதான விசேட விவாதத்தைத் தொடக்கி வைத்துப் பேசிய தமிழ்க்கட்சிகள் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். யுத்த நிறுத்த உடன்பாட்டின்படி வடக்கு கிழக்கு மாகாணத்தில் இயல்புநிலை இன்னும் தோன்றவில்லை. பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றில் இன்னும் அரச படையினர் முகாமிட்டுள்ளனர் என்று திரு சம்பந்தன் நாடாளுமன்றத் தில் சுட்டிக் காட்டினார். இனியும் தாமதிக்காதீர்கள். விரைந்து யுத்தநிறுத்த உடன்பாட்டை அதில் கூறப்பட்டுள்ளவாறு அமுல் நடத்தி வடக்கு கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவித்து சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை திரு.சம்பந்தன் கேட்டுக் கொண்டார். யுத்த நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்து நூறு தினங்கள் சென்ற பின்னரும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் காணப்படும் நிலை இதுதான் என்று நாடாளு மன்றத்தில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டது. ○

# தூரனின் பார்வையில்...

மே மாதம் என்று திட்டமிடப்பட்டு பின்னர் ஜூன் மாதத்திற்கு மாற்றப்பட்டு அடுத்து ஜூலை மாதத்தில் நடக்கும் என்று சிறிலங்கா அரச தரப்பால் கூறப்பட்டு வந்த விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்னமும் எப்போது நடக்கும் என்ற உறுதிசெய்யப்படாத நிலையில் - ஒரு தேக்க நிலையை அடைந் துள்ளதாக தெரிகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் குறிப் பிட்ட கால வரையறைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய பல நடவடிக்கைகள் இன்னமும் முழுமை பெறாத நிலையில், அரச தரப்பின் வாக்குறுதிகள் பல நிறைவேற்றப்படாமல் இழுபறி நிலையில் இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும்.

அரசுக்கும் படைதரப்பினருக்குமிடையே உடன்படிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சில முக்கிய அம்சங்களை செயற்படுத்துவது தொடர்பாக இன்னமும் ஒரு புரிந்துணர்வு ஏற்படவில்லை என்பது பகிரங்கமான விடயமாகியுள்ளது.

அரசின் உத்தரவுகளை படைதரப்பு ஏற்கமறுக்கிறதா, படைதரப்பினரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அரசால் முடியாமல் இருக்கிறதா என்ற ஒரு தன்மையான இரு வினாக்கள் தற்போதைய தேக்க நிலையின் பின்னணியில் சந்தேகங்களை ஏற்படுத்தும் மையக் குழப்பங்களாக உள்ளன.

குறிப்பாக கடற்படையினர் மீதான கட்டுப்பாட்டை அரசு வெகுவாக இழந்துள்ளது போன்ற எண்ணத்தை அவர்களின் நடவடிக்கைகள் ஏற் படுத்திவருகின்றன.

பாடசாலைகள், வழிபாட்டு மையங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து வெளியேறுவதாகக் கூறும் படையினர் புதிய இடங்களில், மக்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து புதிய முகாம்களை அமைத்ததுடன் அந்தப் பிரதேசத்தையே அதியுயர் பாது காப்பு வலயமாகப் பிரகடனம் செய்யும் ஒரு புதிய வகை நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர். இது உடன்படிக்கையை மீறும் ஒரு நடவடிக்கையேயாகும். இது குறித்து விடுதலைப்புலிகள் மட்டுமல்லாது தமிழ் மக்கள் அனைவருமே அரசுக்கு அறிவித்தும் கண்டனக் குரல் எழுப்பியும் அது தொடர்பாக அரசு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. தமிழ்மக்களின் இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தலாக தொடர்ந்தும் படைதரப்பு நடவடிக்கைகள் புதியபுதிய வடிவங்களில் மேற்கொள் ளப்பட்டே வருகின்றன.

அரச தரப்பும் இதை மௌனமாக அங்கீகரிப்பதாகவே தெரிகிறது.

இதேவேளை கடற்படையினரும் புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான விடயங்களில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்புக் கொடுப்பவர்களாக தெரிய வில்லை.



ருக்கும் தெளிவாகத் தெரிந்த விடயமேயாகும். இந்த நிலையில் குற்றவாளிகள் இனம் காணப்படவில்லை எனக் கூறுவது உலகை ஏமாற்றும் செயலேயாகும்.

ஆக, படைதரப்பினர் புரிந் துணர்வு உடன்படிக்கை தொடர்பான விதிமுறைகளை அமுல்படுத்துவதில் ரணிலின் அரசுடன் ஒத்துழைப்பு

யாகவும் மேற்கொள்ள மௌனமாகத் திட்டமிட்டு செயற்படும் அரசாங்கமானது மறுபுறம் தான் விரும்பும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குமுரணான, அரைகுறைத்தீர்வொன்றை சர்வதேசச் சக்திகள் சிலவற்றின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளூடாகத் திணிக்க - அல்லது அவர்கள் அதனை

பல ஒப்பந்தங்களை தமிழ் மக்களின் வாழ்நிலம் தொடர்பான விடயங்களில் அவர்களின் விருப்பத்திற்கு முரணாக அவற்றைப் புறக்கணித்துவிட்டு தன்னிச்சையாக தனக்கு அனுசரணையான நாடுகளுடன் மேற்கொண்டு, அந்தந்த நாடுகளை ஏதோ ஒருவகையில் எமது தாயக நிலப்பரப்பிற்கு அழைத்து வந்து நிலை

## 'ரணில்'ன் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளின் நகர்வும், நடவடிக்கைகளும், நம்பிக்கையீனங்களும்

அவர்களின் நடவடிக்கைகள் யாவும் 'பாதுகாப்பு' என்ற சொல்லைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் அடாவடித்தனமாகவே தெரிகிறது. குறிப்பாகத் தீவுப்பகுதியில் ஈ.பி.டி.பி. யினருடன் சேர்ந்து கொண்டு அவர்கள் இயங்குவதென்பது நிச்சயம் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஆதரவான ஒன்றாக இருக்கப்போவதில்லை. தீவுப் பகுதியில் ஈ.பி.டி.பி.யினரைத் தவிர்த்துவிட்டு கடற்படையினர் அரச கட்டுப்பாட்டை அனுசரித்து நடப்பார்கள் என எதிர்பார்ப்பதும் முட்டாள்தனமானதாகும். தற்காலிகமாகசில விடயங்களில் - சில நிர்ப்பந்தங்களின் காரணமாக புரிந்துணர்வு உடன்படிக்கையை அவர்கள் மதித்து நடக்க முன்வருவதுபோல் நடித்தாலும் மனப்பூர்வமாக அவர்கள்

வழங்குவதாக இல்லை என்பதையே அண்மைக்கால நிகழ்வுகள் பலவும் வலியுறுத்தி நிற்கின்றன.

இதேசமயம், விடுதலைப் புலிகளின், புரிந்துணர்வு உடன்பாட்டு விதிமுறைகளை அனுசரிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் இருந்தாலும் அரசாங்கத்தின் முழுமையான ஒத்துழைப்பு என்பது முறையாக கிடைக்க வில்லை என்பதால் பேச்சுவார்த்தைக்கு முன்னரான இயல்பு நிலையை உருவாக்கும் செயற்பாடுகள் எதிர்பார்த்த முன்னேற்றத்தைக் காட்டுபவையாக இல்லை.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அமைச்சர்களும் மாறி மாறி வெளிநாடுகளுக்குப் பறந்த வண்ணம் போகும் நாடுகளில்

**தமிழ்மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங் களை , கடற்பிரதேசங்களை, கடல் வளங்களை, வான்பரப்பை, அந்நியர்களுக்கு உடன்படிக் கைகளின் அடிப்படையில் தாரை வார்க்க முனைப்புடன் செயலாற்றும் அரசு, தமிழ் மக்களதுஉரிமைகள் தொடர் பான பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வதில் தாமதம் செய்வது என்பது சமாதானம் தொடர்பான நகர்வுகளில் அதன் அக்கறையின்மையையே புலப்படுத்துவதாகவும் உள்ளது.**

சமாதான நடவடிக்கைகளை ஆதரித்து செயற்படுவார்கள் என்பதை நம்புதல் சாத்தியமற்ற விடயமாகவே உள்ளது.

அண்மைக்காலத் தீவுப் பகுதி நிகழ்வுகள் இதற்கு சரியான உதாரணமாகும். செம்மணன் தொடர்பான விடயத்தில் அவர் மீது தாக்குதலை நடத்தியோரை இனங் காண முடியவில்லை என விசாரணைக்குழுவினர் கை விரித்துள்ளமையானது. குறிப்பிட்ட, இன்னமும் பிடிபடாத, நிலையில் உள்ள குற்றவாளி களுக்கு மிகவும் உற்சாக மூட்டும்செய்தியேயாகும்.

தீவுப்பகுதியில் அண்மைக் காலங்களில் நடைபெற்ற சம்பவங்களின் சூத்திரதாரிகள் கடற்படையி னரும் அவர்களின் கைக்கூலிக ளாகச் செயற்படும் தமிழ்க் குழுவொன்றைச் சேர்ந்தவர்க ளும் தான் என்பது அனைவ

எல்லாம் சமாதான நகர்வுகளின் முன்னேற்றம் குறித்து பிரச்சார ரீதியிலான விளக்கமளிப்பவர்களாகவும் உள்ளனர். சிறிலங்காவில் நிலை கொண்டு பேச்சுவார்த்தைகளுக்கான முன்னேற்பாடுகள் குறித்து கவனம் செலுத்துவதில் காட்டும் அக்கறையை விடவும் 'பிரசாரம்' செய்வதிலும், வேறுசில தந்திரோபாயச் செயற்பாடுகளை தீவிரப்படுத்தி, சமாதான முயற்சி கள் குறித்த சந்தேகத்தையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தும் யுக்திகளைக் கையாண்டு விடுதலைப்புலிகளை மறைமுகமாக அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலேயே ரணிலும் அவரது அமைச்சர்களும் முனைப்புக் கொண்டு இயங்குவதாகவே தெரிகிறது.

ஒருபுறம் சந்திரிகாவை பொறிக்குள் சிக்கவைக்கும் முயற்சிகளை மிகவும் நுணுக்கமாகவும் சட்டரீதி

நிராகரிக்கும் நிலையில், சமாதான நடவடிக்கையை விடுதலைப்புலிகள் குழப்பும் ஒரு சூழ்நிலைக்குள் அவர்களை தள்ளி அவர்கள் மீது சர்வதேச அழுத்தத்தைப் பிரயோகிக்கும் தந்திரோபாயம் கொண்ட மூலோபாயங்களை வகுப்பதில் ரணிலின் அரசு தீவிரம் காட்டி வருவதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதனை நிராகரித்து விடமுடியாத அளவுக்கு ஒன்றன்பின் ஒன்றாக சிறிலங்கா அரசு திடீர்திடீரென அயல்நாடுகளுடனும், அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளுடனும் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களின். மூலோபாய நோக்கங்களுடன் கூடிய தந்திரோபாய நகர்வுகள் தமிழ் மக்களை விழிப்புடன் இருக்க வேண்டிய எச்சரிக்கை உணர்வுக்கு இட்டுச் செல்வதுடன் 'ரணிலின்' உள்நோக்கம் குறித்துசில அச்சங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவுடனான கடற் பரப்பு வான்பரப்பு தொடர்பான ஒப்பந்தம், இந்தியாவுடனான திருமலை எண்ணக்குதம் தொடர்பான ஒப்பந்தம், வட கடற்பகுதியில் சீனாவுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்கும் உடன்படிக்கைகளை மேற் கொண்டு வரும் ரணிலின் அரசு இதற்கு மாற்றீடாக இந்த நாடுகளிடமிருந்து சிறி லங்கா படையினரின் பலத்தை மேம்படுத்துவதற்கான ஆயுதங்களை கொள் வனவு செய்வதற்கான, இரா ணுவத்திற்கு பயிற்சிகள் வழங்குவதற்கான ஒப்பந்தங்களையும் மேற்கொண்டு வருகின்றமையானது தமிழ் மக்களை அச்சுறுத்தும் போக்கை அரசு மேற்கொள்வதையே காட்டுகிறது.

தமிழ்மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களை, கடற்பிரதேசங்களை, கடல் வளங்களை, வான்பரப்பை, அந்நியர்களுக்கு உடன்படிக்கைகளின் அடிப்படையில் தாரைவார்க்க முனைப்புடன் செயலாற்றும் அரசு, தமிழ் மக் களதுஉரிமைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதில் தாமதம் செய்வது என்பது சமாதானம் தொடர்பான நகர்வுகளில் அதன் அக்கறையின்மையையே புலப்படுத்துவதாகவும் உள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசு காட்டும் தாமதமானது இன்னும்

கொள்ளச் செய்வதன் மூலம் தமிழீழ தேசத்தை பல்வேறு உலக நாடுகளின் காலனித்துவ பகுதிகளாக்கி பிரித்துக் கொடுக்கும் அதன் அணுகுமுறையை விரிவுபடுத்தவே வழிவகுக்கும்.

இதேவேளை சிறிலங்கா தனது ராணுவ பலத்தை மேம் படுத்துவதில் காட்டிவரும் அமைதியான. ஆனால் தீவிர மான நடவடிக்கைகள் பல் வேறு வகையான சந்தேகங் களை தமிழ்மக்கள் மனதில எழுப்பத் தொடங்கியுள்ளன.

ஒருகாலத்தில் தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் பல்வேறு புதிய குடியேற்றத்திட்டங்களின் சூத்திரதாரிகளும். தமிழ்மக்களை. சிங்கள காடையர்களை ஆயுதபாணிகளாக்கி அவர்களின் எல்லைப்புற வாழ்விடங்களில் இருந்து இரவோடு இரவாக ஓட ஓட விரட்டியடித்து அப்பிரதேசங்களை ஆக்கிரமித்து சிங்களக் குடியேற்றங்களாக மாற்றிய சிங்கள பௌத்த இனவெறியர்களுமான மெரில் குணரத்னவையும், ரவி ஜெயவர்த்தனவையும் ரணில் தனது அமைச்சரவையில் பாதுகாப்பு ஆலோசகர்களாக நியமனம் செய்துள்ளார்.

ஜே. ஆரை, முன்னாள் சிறி லங்காவின் பிரதமர்களில் ஒருவரான சேர். ஜோன் கொத்தலாவல 'பொலங்கா' எனச் சிங்களத்தில் வழங்கப்படும் 'விஷக் கட்டுவிரியன்' பாம்புக்கு ஒப்பிட்டார் என்றால் அவரது மகன் எத்தகைய இனவாத விஷம் கொண்டவராக இருப்பார் என யோசிக்க வேண்டியது அவசியமாகும்.

ஆக சமாதான கோஷமெழுப் பியபடி சமாதானத் திற் கான புறச்சூழலை முழுமையாக உருவாக்க காலதாமதம் செய்யும் அரசாங்கம், அதற்கு அச்சுறுத்தலான புறச்சூழலை உருவாக்குவதில் தீவிரம் காட்டுவதானது ஆரோக்கியமான விடயமாகத் தென்படவில்லை.

ரணிலின் அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நியாயமான முறையில் சர்வதேச அனுசரணையுடன் தீர்த்து சிறிலங்காவையும் பாதுகாத்துக் கொள்வாரா அல்லது பேரினவாதிகளை திருப்திப்படுத்த முனைந்து சிறிலங்காவையும் சீரழிப்பாரா என்பதை அடுத்து வரும் மாதங்கள் உணர்த்தும்.

□



# ஆண்டு ஐந்து புலமைப்பரிசில்பரீட்சை ஒரு சித்திரவதை

**மு.திருநாவுக்கரசு**

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை தவறானதும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தவல்லதும் என்ற கருத்துக்களை பல அறிஞர்கள் அவ்வப்போது முன்வைத்துள்ளனர். குழந்தைகள் "பந்தயக் குதிரையாக்கப்படுகின்றனர்" என்றும், புத்தகச் சுமைகளால் குழந்தைகளின் "மூளைகள் அமுத்தப்படுகின்றன" என்றும் பலவாகக் கருத்துக்கள் கூறப்படுகின்றன.

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை நிறுத்தப்போவதாக இலங்கை அரசு முடிவெடுத்து பல ஆண்டுகள் கடந்த பின்பும் இற்றை வரை பரீட்சை தொடர்கின்றது.

கல்வி என்பது உலோகப் பொருட்களை அச்சில் வார்த்தெடுக்கும் வார்ப்புத் தொழிலுமல்ல இயந்திர உற்பத்திப் பண்டங்களுமல்ல. அது உயிரோட்டமும் புதுமையும் நிறைந்த சிருஷ்டிக்கான ஊற்று. ஊற்றுக்களை நெறிப்படுத்துதல் தான் திட்டமிடலே தவிர பிள்ளைகளை வெறும் உபகரணங்களாக்கிவிடுதல் திட்டமிடலல்ல.

மனித குலத்தின் கடந்த கால அறிவையும் அனுபவத்தையும் திட்டமிட்ட வகையில் புதிய தலை முறையினரிடம் கைமாறுவதன் மூலம் பிள்ளைகளை படைப்பாற்றல் மிக்க நிலைக்கு உயர்த்துவது தான் கல்வியின் நோக்கமே தவிர பிள்ளைகளை உற்பத்திப் பண்டங்களாக்கிவிடுவதல்ல

இப்பரீட்சை பிழையான போதிலும் வாதத்திற்காக இதன் நோக்கத்தை முதலில் ஆராய்வோம்.

ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டதன் பிரதான நோக்கம் திறமையுள்ள ஏழைப்பிள்ளைகளை அடையாளங்கண்டு அவர்கள் தமது படிப்பைத் தொடர்வதற்கு ஏற்ற நிதி உதவியைப் புரிவதாகும். ஆனால் நடைமுறை பெருமளவுக்கு வேறாக உள்ளது. அதாவது மத்திய வர்க்க, மேல்தர மத்தியவர்க்க பெற்றோரின் பிள்ளைகள் முன்னணிப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கான ஓர் அனுமதிச் சிட்டையாக இது உள்ளது என்பதுதான். அத்துடன் இது அடிப்படை நோக்கத்திற்கு எதிரான விளைவையும் கொண்டு ள்ளது.

இதனை விரிவாக நோக்குவோம். புலமைப்பரிசில் பெறுவதற்கேற்ற வருமான எல்லைக்கு மேலான வருமானத்தைக் கொண்ட பெற்றோர் தமது உயர்ந்த வருமானநிலைப் பின்னணியில், அதாவது பிள்ளைக்கு புலமைப் பரிசில் நிதி கிடைக்கமுடியாத உயர்ந்த வருமானப் பின்னணியில் இருந்து கொண்டு தமது பிள்ளை களை தினமும் 12 மணித் தியாலங்களுக்குக் குறையாத கல்விச் செயற்பாட்டிற்கு உள்ளாக்கி, பிள்ளை களை கசக்கிப் பிழிந்து பரீட்சையிற் சித்தியடையச் செய்ய முயல்கின்றனர். இவ்வாறாகச் சித்தியடையும் பிள்ளைகளின் உயர்ந்த பட்சப் புள்ளிகளினால் சித்தியடைவதற்கான புள்ளிகளின் நிலை உயர்த்தப்பட்டு ஏழைப் பிள்ளைகள் சித்தியடைவதற்குரிய இயல்பு நிலை குறைந்தும் போகின்றது. அதேவேளை "உயர்ந்த" வருமானத்தைப் பெறும் பெற்றோரின் பிள்ளைகள் சித்தியடைந்திருந்தும், நிதி பெறமுடியாது, இங்கு நோக்கம் எதுவோ அது நிறைவேறவில்லை.

இனி கல்விக் கொள்கைக்குள்ளால் இதனை ஆராய்வோம்.

வாரத்தில் ஏழு நாட்களும் பிள்ளைகளைக் கல்விச் செயற்பாட்டிற்கு உள்ளாக்குகிறோம். தினமும் குறைந்தது 12 மணித்தியாலங்கள் பிள்ளை கல்விச் செயற்பாட்டிற்கு உள்ளாகின்றது. பாடசாலை, தனியார் கல்வி நிலையம், பிரத்தியேக கல்வி, வீட்டுவேலைக் கல்வி இவை அனைத்திற்குமான பிரயாணம் என பிள்ளையின் முழு நேரமும் இதனுடன் செலவழிந்து உறக்கத்தைத் தவிர அதற்கு வேறு அமைதியற்று, மகிழ்சியற்றுப் போய் விடுகின்றது.

அத்துடன் சமுக அந்தஸ்து போட்டிகளும், அயலவர், உறவினர் பிள்ளைகளுடனான பெற்றோரின் போட்டி பொறாமை மனப்பாங்குகளும் சேர்ந்து பச்சைப் பாலகர்கள் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். இவற்றிற்கும் அப்பால் ஒழுங்காற்று நடவடிக்கைகள், பாலகர்களை குற்றவாளிகளாகவே நோக்கும் மனப்பாங்குகள், பொலிஸ்தன அணுகுமுறைகள் எனப் பலவற்றுக்குள்ளாலும் பிள்ளைகள் சித்திரவதைக்குள்ளாகின்றனர். ஏழு நாளும் ஓய்வின்மை, அமைதியின்மை, பெற்றோரின், பாடசாலைகளின் அந்தஸ்து போட்டிநிலை என்பவற்றால் குழந்தைகள் அரைத்தெடுக்கப்படுகிறார்கள்.

பிள்ளைகளுக்கு தமது பெற்றோருடன், சகோதரர்களுடன், அயலவர்களுடன் பேசிப்பழகவும், தமது

> — மனித குலத்தின் கடந்த கால அறிவை யும் அனுப வத்தையும் திட்ட மிட்ட வகை யில் புதிய தலை முறையி னரிடம் கைமாற்று வதன் மூலம் பிள்ளைகளை படைப் பாற்றல் மிக்க நிலைக்கு உயர்த்துவது தான் கல்வியின் நோக்கமே தவிர பிள்ளைகளை உற்ப்பத்திப் பண்டங்களாக்கி விடுவதல்ல —

அன்பை பரிமாறவும் நேரமில்லை. பெற்றோருடன் அன்பைப்பரிமாற, உணவை ஆறியமர்ந்திருந்து ருசித்துச் சாப்பிட பிள்ளைகளுக்கு வாய்ப்பில்லை. இவற்றால் அவர்களின் இதயங்கள் மரத்துப்போய்விடுகின்றன. பிள்ளைகளின் இதயங்களில் வெறுப்பும் சினமும் விதைக்கப்படுகின்றன. பெரியோர் ஆகிய நாம் பலம் கொண்டவர்கள் என்பதனால் சிறுவர்களது எண்ணங்களையும், உணர்வுகளையும் அவர்கள் வெளிப்படுத்தும் சினங்களையும் தற்காலிகமாக இலகுவாக அடக்கிவிட முடிகின்றது. இவற்றில் எண்ணங்களும் உணர்வுகளும் காலகட்ட வளர்ச்சியைப் பெற முடியாததால் அவை கருகி எரிந்துவிடுகின்றன. அந்தச் சாம்பல் மேட்டில் சினமும் விரக்தியும் இயலாமையும், கொடூரமும் தளைத்தோங்கி இளைஞர்களாகும்போது முழு வெளிப்பாட்டைக் கொள்கின்றது. சிலவேளைகளில் ஒரு சிறு தொகுதியினருக்கு பதவிகளும் பட்டங்களும் பிற்காலத்தில் மிஞ்ச முடியும். ஆனால் அவர்கள் கூட நின்மதியின்மையையும், வெறுப்பையும் தம்வாழ்வில் வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் தமது வெறுப்புக்களையும் சினங்களையும் தமது குடும்பங்கள் மீதும் சமுகத்தின் மீதும் பிற்காலத்தில் காட்டுகின்றனர்.

பெற்றோர் தமது ஆசைகளுக்குள்ளாலும், தமது இயல்புகளுக்குள்ளாலும் தமது விருப்பங்களுக்குள்ளாலும் பிள்ளைகளின் எண்ணங்களை யும் விருப்பங்களையும் நலமடித்துவிடுகின்றனர். இதன் விளைவால் பல வேளைகளில் பிள்ளைகள் தம்மியல்பையும் இழந்து, பெற்றோர் இயல்பையுமிழந்து விகாரப்பட்டுவிடுகின்றனர். இதனை விளக்க இந்தக் குட்டிக்கதை பொருந் தும். அதாவது விளையாடிக் கொண்டிருந்த தனது மகனைப் பார்த்து தந்தை ஆத்திரத்து டன் கேட்டார் "டேய் காவாலி, உன்ரவயதில ஆபிரகாம் லிங்கன் என்ன செய்தவன் தெரியுமா?" அப்போது மகன் தந்தையைப் பார்த்து திருப்பிக் கேட்டான், "அது சரியப்பா, உங்கட வயதில ஆபிரகாம் லிங்கன் என்னவாய் இருந்தவர்?" தறுபுறு என்று தந்தை விழித்த போது மகன் சொன்னான், "அப்பா, உங்கட வயதில ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாய் இருந்தவர்".

எமது சமுகத்தின் சீதனச் சந்தையையும், எமது சமுகத்தின் உழுத்துப்போன அந்தஸ்துக்களையும் மனதிற் கொண்டு அவற்றிற்கான பந்தயப் பொருட்களாக பிள்ளைகளை முன்வைத்து அவர்களது சுயத்திற்கும் இயல்புக்கும் மாறாக அவர்களை கடைந்தெடுக்கும் முதலாவது களமாக ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை அமைகின்றது. இதனை வேடிக்கையாகச் சொல்வதென்றால் பிள்ளைகள் சித்தியடைகிறார்கள். என்று சொல்வதைவிட பெற்றோர் சித்தியடைகிறார்கள் என்பதே பொருந்தும்.

பிள்ளைகள் சுயத்தை இழக்கிறார்கள், கொண்டாட்டங்களை இழக்கிறார்கள், விழாக்களை இழக்கிறார்கள், நிம்மதியை இழக்கிறார்கள், மகிழ்ச்சியை இழக்கிறார்கள், ஆக்கபூர்வ சிந்தனைகளை இழக்கிறார்கள், பாடவிதானங்களுக்குள்ளும்

> — சிறுவர்களை அவர்களது நோக்கு நிலையிலிருந்து சிந் திக்க வேண்டும். எமது சிறுவர் கள் பற்றியும், கல்வி நிலைபற்றியும் சிறப்பான களஆய்வு களை மேற்கொண்டு புதியபல மாற்றங்களுக்கு பிறகும் வர வேண்டும். சிறுவர்களை அறிவினாலும், மனத்தி னாலும், மகிழ்சியா லும், அவர்களுக்கு ஏற்ப டும் அனுபவரீதியான தன் நம்பிக்கையா லும் அவர்களை வளம் படுத்த வேண் டும். —

அதன் பரீட்சை நிர்ப்பந்தங்களுக்குள்ளும் சுமைகளுக்குள்ளும் நசிந்து போய்விடுகிறார்கள்.

மாணவர்களை சித்தியடையாமை என்ற தளத்திலிருந்து தவிர்ப்பதற்காக தொடர்வகுப்பேற்றற் கோட்பாட்டின் அடிப்படையில் வரும்பேற்றப்படுகிறார்கள். இது மிகவும் சரியான கல்விக்கொள்கையே. ஆனால் ஆண்டு ஐந்து புலமைப்பரிசிற் பரிட்சையில் தோல்வியடையும் மாணவர்கள் வகுப்பேற்றப்பட்டாலும்கூட அவர்கள் "சித்தியடையாதவர்கள்" என்ற முத்திரையுடனேயே சமுகத்தில் ஒருவகைத் "தீண்டாச்சாதி" ஆக்கப்படுகிறார்கள். வீட்டிலும், பாடசாலையிலும், சமுகத்திலுமே இதனை காலமெல்லாம் காணலாம் உண்மையில் இச்செயல் ஓட்டமற்றிக் புறமோஷன் (AUTOMATIO PROMOTION) எனும் கோட்பாட்டிற்கு எதிரானது. இந்தக் கொடுஞ் செயலில் பிள்ளைகள் குற்றவாளிகளாகவும், இயலாதவர்களாகவும், தாழ்வு மனப்பாங்குக்கு உரியவர்களாகவும் தள்ளப்படுகிறார்கள். மகிழ்ச்சியாயிருக்க வேண்டிய, அதுவும் பராயமறியாப் பருவத்தில் நிகழும் இப்பரீட்சை அவர்களது மேற்படிப்புவரை நீடிக்கின்றது.

எமது சமுக அந்தஸ்தின் அளவுகோல் மூலம் அவர்கள் பிறத்திகளாகக் கணிக்கப்பட்டு சமுகத்தின் புறப்பக்கம் செருகப்படுகின்றனர். இதனால் அவர்கள் சமுகத்திலிருந்து தன்னி யல்பாகவே ஒரு குற்றவாளிபோல அந்நியமாகின்றனர். இங்கு ஒரே நேரத்தில் சிறுவர்கள் ஒருபுறம் அந்நிய மாக்கப்படுதலும், மறுபுறம் அந்நியமாதலும் நிகழ்கின்றன. ஓய்வு ஆக்க சத்தியை வளர்க்கும், கிரகிப்பாற்றலை வளர்க்கும், புத்துணர்வை அளிக்கும், பற்றையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும், சிந்தனா சத்தியை வளர்க்கும். உண்மையில் ஓய்வுகூட ஒரு பாடம் தான். பாடப்படிப்பிலிருந்து ஓய்வைப் பிரிக்கமுடியாது.

ஆண்டு ஐந்து குழந்தைகளை சுமாராக நான்கு ஐந்து ஆண்டுகள் சித்திரவதை செய்தது போதாதென்று இப்போது ஆண்டு எட்டு பிள்ளைகளுக்கும் இப்படி ஒரு புலமைப் பரிசில் பரீட்சை கொண்டுவரப் போகிறார்களாம். பிழை என்று தெரிந்தும் சமூக அந்தஸ்து, சமுக நியதி, சமுகத்தின் போக்கு என்று காரணங்கள்கூறி சிறுவர்களை வார்ப்புப் பண்டங்களாக்குகிறோம்.

சிறுவர்களை அவர்களது நோக்குநிலையிலிருந்து சிந்திக்க வேண்டும். எமது சிறுவர்கள் பற்றியும், கல்வி நிலைபற்றியும் சிறப்பான களஆய்வுகளை மேற்கொண்டு புதியபல மாற்றங்களுக்கு நாம் வரவேண்டும். சிறுவர்களை அறிவினாலும், மனத்தினாலும், மகிழ்ச்சியாலும், அவர்களுக்கு ஏற்படும் அனுபவரீதியான தன்னம்பிக்கைகளினாலும் அவர்களை வளம்படுத்த வேண்டும்.

O

இதே நேரம் சுபேசனுக்கு வலப்பக்கம் முன்னால் எதிரி காவலரணில் இருந்து வரும் துப்பாக்கிச் சூடுகள் புலிக்குட்டி குழுவில் இருக்கும் சிற்றம்பலத்தையும் நிவேதனனையும் வயிற்றில்காயப்படுத்துகின்றன. இரத்தம் கொப்பளித்துப் பாய்கின்றது. உடனே சிற்றம்பலம் அதணைக் கருத்தில் எடுக்காது தன்னிடம் இருந்த "லோ"



# இன்னொரு போர்முகம்

ஒன்றுக்கு உயிர்கொடுக்க அது வை- 12 விமானத்தின் வால் பகுதியில் முட்டி மோதி வெடித்து எரிகின்றது. உடனே அடுத்த லோவை விமானத்தின் முன்பகுதி நோக்கி ஏவி அதுவும் வெடித்து எரிகின்றது. அப்பிரதேசத்தை வர்ண ஒளிஜாலங்களாக மாற்றியிருந்த போர்க்காலப் பின்னணிக்கு விமானம் எரிவதால் ஏற்படும் வெளிச்சம் மெருகூட்டுகின்றது. சிற்றம்பலம் தன்னிடம் இருந்த இன்னுமொரு லோவை தடைவெளிக் காட்டிக் கொண்டிருக்கும் பெரிய தேடுதல் விளக்கிற்கு அடிக்க அது மூச்சடங்கிற்று. மற்ற லோவையும் ஏனைய ஆயுதங்களையும் எதரியின் காப்பரண்கள் நோக்கி பிரயோகித்தவன் இப்பொழுது "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என சொல்லிகொண்டு தனது சாச்சரை இழுக்க அப்பகுதியில் பெரும் தீப்பிழம்பு ஜோதியாய் எழுந்து மறைகின்றது.

இதன்போது காயப்பட்டிருந்த நிவேதன் பிரதான முகாமினுள் ஊடுருவித் தாக்குதல் நடத்தி தொலைத் தொடர்புக் கோபுரத்தில் அருகில் தனது சாச்சரை இழுக்கின்றான். இப்பொழுது பிரதான தளத்திற்குப் பின்னால் இருக்கும் காவல் அரண்களில் இருந்து சீறிவரும் துப்பாக்கி ரவைகளும் சிறு பீரங்கிக் குண்டுகளும் இவர்கள் நிற்கும் பிரதேசத்தை அங்குல அங்குலமாக விதைபடுகின்றது. 37.மி.மீ அரணை குண்டு வைத்து தகர்த்த நிவேதன் குழுவினர் பிரதான முகாமினுள் புகுந்துவிட்டனர்.

அதே வேளை 14.5 மி.மி ஐ நோக்கி ஓடிய றெஜியின் குழுவினர்அங்குஅது இல்லாமையினைக்கண்டு திகைக்கின்றனர்உடனே அவர்கள் தங்கள் பக்கம் இருக்கும் உப விமான ஓடுபாதையை அடைந்து அதன் வாசலில் இருந்த காப்பரணைத் தாக்கி அழித்து உள்ளே சென்று கனரக வாகனங்களை தாக்கிஅழித்த னர். அதே நேரம் சுபேசன் ஓடிச்சென்று 37மி.மீ கனரக இயந்திர துப்பாக்கியை இயக்க முயற்சிக்கின்றார். ஏனோ அது இயங்கவில்லை அது மட்டும் கை கொடுத்திருப்பின் அம் முகாமின் நிலைமையோ வேறுவிதமாக மாறியிருந்திருக்கும் எதிரி போர் அழிவை சந்தித்திருப்பான் அது இயங்கவில்லை என்றவுடன் அதனையும் தகர்த்து அழித்து விட்டு தான் பங்கர் இருக்கும் ஓட ஒரு பாதைனூடு உட்செல்ல முற்படும்போது அதன் வாயிற் காப்பரணில் இருந்து வந்த துப்பாக்கிச்சூடுகள் இவர்கள் வேகத்தை குறைக்க அக் காப்பரணை அழித்து உள்ளே செல்கின்றனர். இப்பொழுது இவர்கள் எல்லோரும் முகாம் மையப்பகுதியில் நின்று தங்கள் தாக்குதல்களை தொடர்கின்றனர். இப்பிரதேசம் முழுவதும் மின் ஒளியிழந்து இருள் கவிந்து இருப்பின் சீறிவரும் துப்பாக்கி ரவைகளும் எரிந்து கொண்டிருக்கும் விமானத்தின் தீ பரப்பும் ஒளியும் எரியும் காப்பரண்களின் ஒளியும் அப்பிரதேசத்தை வித்தியாசமான ஒலி ஒளி வலயமாக்குகின்றன. பூமிக்கு சமாந்திரமாய் துப்பாக்கி ரவைகளின் தணல் வலை ஒன்று பின்னப்படுகின்றது. இவர்களிடமிருந்த வெடிமருந்துகளும், துப்பாக்கி ரவைகளும் முடிவடைகின்றது. இதனைத் தளபதி சுதாகருக்கு அறிவித்தவண்ணம் தம் தாக்குதலைத் தொடர்கின்றனர்.

இதன்போது விஜயரூபன் காயமடைய அவன் குப்பி கடித்துவிட்டு தனது சாச்சரை இழுக்கின்றான். இரண்டும் வேலைசெய்யவில்லை. மிகுதிக் கரும்புலிகளில் நிலவன் தனா கைகளிலும் மங்கை தலையிலும் காயமடைகின்றனர். தம்மிடம் இருக்கும் சிறிதளவு வெடிமருந்தை விமானங்கள் தரித்து நிற்கும் கட்டடத்தின் வாசலில் வெடிக்க வைக்கின்றனர். அது சிறு சேதத்தையே ஏற்படுத்துகின்றது. தம்மிடம் இருந்த கைக்குண்டுகளை அதனூடாக உள்ளே எறிய அவை வெடித்து சிதறுகின்றன.

இப்பொழுது அவர்களை பின்வாங்கிவரும்படி தளபதி சுதாகரிடம் இருந்து கட்டளை பிறக்கின்றது. உள்நிற்கும் கரும்புலிகள் தாம் உள்நுழைந்த பகுதியிலிருந்து இடப்பக்கமாக 500 மீ தூரமளவில் நிற்கின்றனர். அதேவேளை ஓடுபாதைக்கு வெளியால் இருக்கும் வீதிவழியே கவசவாகனம் சகிதம் இராணுவத்தினர் முன்னேறிவர அவற்றை றெஜி தலைமையிலான கட்டவுட்ரீம் ஆர்.பி.ஜி, 'லோ ஆகிய ஆயுதங்களால் தாக்கி அவர்கள் வேகத்தை தடைப் படுத்துகின்றனர். அவ்வாறே செய்த வண்ணம் இடப்பக்கமாக முன்னேறி வெளியில் இருக்கும் காப்பரண் களை தாக்கியழித்து உள்ளே தப்பி நிற்கும் கரும்புலிகள் பின்வாங்கி வ்ருவதற்கு பாதை ஏற்படுத்தி கொடுக்கின்றனர். தனது துப்பாக்கியால் மேல்நோக்கி சுட்டவண்ணம் அதன் திசையில் வெளியே வரும்படி அருண் கரும்புலிக ளுக்கு வோக்கியில்

**– தூயவன் –**

அறிவிக்கின்றான். அவர்கள் ஒவ்வொரு வராக வெளியேறிக்கொண் டிருக்கின்றனர். அதே நேரம் வலப்புறமிருந்து இராணுவத்தினர் பாரிய சுடுவலுவைப் பிரயோகித்த வண்ணம் இவர்களை தப்பவிடாது தடுக்கும் நோக்குடன் முன்னேறுகின்றான். நிலவன் தான் தப்பி வரும்போது வழியில் விஜயரூபன் காயப்பட்டு இருப்பதையும் சாச்சரை இழுத்து அது வெடிக்காமல் இருப்பதையும் குப்பி வேலை செய்யாததையும் ஒரு பார்வையில் கவனித்து அவன் அருகில் இருந்து சாச்சரைக் கழற்றி தூர எறிகின்றான். இப்பொழுது அவனுக்கு உதவியாக புலிக்குட்டியும் சேர்ந்து கொள்கின்றான்

அவர்கள் அவனைத் தூக்கிவர முயற்சிக்கையில் கிரிச் கிரிச் என காது மடல்களை ரவைகள் உரசுவது போல் காற்றைக் கிழித்து செல்கின்றன. அதே நேரம் பாதையை மூடப்போறான் வெளியில் கெதியா வாங்கோ அருண் மூச்சுப்பிடித்து வோக்கியில் கத்துவது கேட்கின்றது. அவர்கள் இருவரும் விஜயரூபனைத் தூக்கிக்கொண்டு தங்கள் சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி ஓடி விமான ஓடுபாதை அதற்கு வெளியால் இருக்கும் வீதி பண்ட் என்பவற்றைக் கடந்து இவர்கள் இங்கால வந்து விழவும் எதிரியின் கனரக வாகனங்கள் சகிதம் காவற் படையினர் வீதியை மூடவும் சரியாக இருக்கின்றது சில கண நேரஇடைவெளியில் இவர்கள் தப்பித்துக் கொள்கின்றார்கள். எதிரி ஒரு ஊகத்தில் இவர்கள் எங்கு நிற்பார்கள் எனக் கணித்திருக்க வேண்டும். அவனது அனைத்து சூட்டு வலுக்களையும் பயன்படுத்தி இவர்கள் நிற்கும் பிரதேசங்களை சல்லடை போடுகின்றான். உடனேயே ஆட் களைச் செக்பண்ணி கணக்குப் பார்க்கின்றனர். சிற்றம்பலம் நிவேதன் இல்லை. தனா விஜரூபன் நிலவன் ஆகியோர் காயம்.

இவர்களில் விஜயரூபனுக்கு பெரிய காயம். மற்றவர்கள் நடக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனர். நிலைமையை சுதாகருக்கு அறிவிக்க அவரும் சரி...சரி... கெதியா பின்னால வாங்கோ... இவர்களுக்குச் சொன்னபடியே நிலைமையை சொர்ணமண்ணைக்கு அறிவிக்கின்றார். இவர்கள் மீண்டும் பின்வாங்கத் தொடங்குகின்றனர். இறுக்கமான பற்றைக்காடு, கும் இருட்டு, எதிரியின் பலமான தாக்குதல் போன்றன இவர்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துகின்றன. வானில் இருந்து MI-24,பேல் ரக உலங்குவானூர்திகள் புக்காரா குண்டு வீச்சு விமானம் என எல்லாம் ஒன்று சேர்ந்து வானிலிருந்து வெடிமருந்துகளை அள்ளிக்கொட்டி ஊழிக்கூத்தாடுகின்றன.

= தொடரும்

# மதவடி மயிலர்



செய்தி: ***மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளுடன் பிரதமர் இரகசியக் கலந்துரையாடல்...***

மயிலா: அரசபீடமும், வெள்ளரச பீடங்களும் சந்தித்து பேசுகிறது என்றாலே ஏதோ சிக்கல் என்றுதான் அர்த்தம்.... அதுவும் சமாதான காலத்தில் இரகசியக் கலந்துரையாடல் மேற்கொள்வது என்பது.... ஆட்சிபீடம் சுயாதீனமாக இயங்கும் நிலை சிறிலங்காவில் இல்லை ,என் பதையே உணர்த்துகிறது. தம்மோபதேசம் செய்ய வேண்டிய பீடாதிபதிகள் அரசியலுபதேசம் செய்வது புத்தருக்கே பொறுக்காதுபாருங்கோ....

செய்தி: ***சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் அமெரிக்கப் படையி னருக்கு விலக்களிக்க பாதுகாப்புச் சபை முடிவு...!***

மயிலா: அதெப்படி சர்வதேச பொலிஸ்காரருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடுக்க முடியும்...? இதுவும் ஒரு கதையே! பாருங்கோ... ஆளும்வர்க்கத்திற்கு ஒரு நீதி... ஆளப்படும் வர்க்கத்திற்கு இன்னொரு நீதி... இது தானே உலக சனநாயகத்தின் பொது விதி... பாதுகாப்புச்சபை அமெரிக் காவை நல்லாத்தான் பாதுகாக்கிறது பாருங்கோ....!

செய்தி: ***பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தோர் வெலிக்கடைச் சிறையில் மோதல்.***

மயிலா: வெலிக்கடைச் சிறையே ஒருபெரிய பாதாள உலகம் தானே பாதாள உலகத்தவரை அங்கை கொண்டு போய் விட்டால் மோதல் செய்யாமல்... பின்ன வேதமே ஓதப்போகினம் வேதாளத்தை எங்கை கொண்டு போனாலும் அது முருங்கை மரத்திலை மீண்டும் மீண்டும் ஏறிக் கொண்டு தான் இருக்கும் பாருங்கோ....

செய்தி: ***சிறிலங்கா வான் படைக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை...***

மயிலா: தரைப்படைக்கு ஆட் சேர்க்கப் போய் மண்கவ்வினது தான் மிச்சம் 5000பேரை சேர்க்கவெளிக் கிட்டு ஐஞ்சாறு வாரம் மினக்கெட்டு 500 பேரைக் கூட சேர்க்கமுடி யேல்லை.. இப்ப வான்படைக்கு ஆள்பிடிக்கப் போகினமாம்.... அதுசரி கடற்படைக்கும் ஆட்சேர்க்க விளம்பரம் போடுகினம் பாருங்கோ... ஒரு வேளை இது சமாதானத்திற்கான படை சேர்ப்பாக இருக்குமோ... சிறிலங்கா தலைவர்கள் இப்படியும் காரணம் கூறலாம் பாருங்கோ..

செய்தி: ***வை. கோபால்சாமி கைது... கருணாநிதி கருத்துக் கூற மறுப்பு...!***

மயிலர்: 'இனமானம்' கலைஞரை கருத்துக் கூறத் தடுத்து விட்டது பாருங்கோ... உலகத் தமிழ்த் தலைவராக உலா வரக் கனவு கண்டவர்... உள்ளூர்ப் பேட்டைத் தலைவராக கூட இருக்க லாயக்கற்றவர் எனத் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொண்டார் பாருங்கோ...

செய்தி: ***பாதுகாப்பு தொடர் பான விடயங்களில் சமரசம் என்பதற்கு இடமேயில்லை என்கிறார் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லியனல் பலகல்ல...***

மயிலா: அப்ப யுத்தம் தொடர்பான விடயங்களில் மட்டும் சமரசத்திற்கு இடமுண்டு என்கிறாரோ...? சமரசம் என்பதை தளபதி தவறாகப் புரிந்து கொண்டார்போலை.. விட்டுக் கொடுத்தல் புரிந்துணர்வின் வெளிப்பாடு... விட்டோடிப் போதல் தான் பலவீனத்தின் வெளிப்பாடு.... பலகல்ல புரிந்துகொண்டால்சரி.






# நிலவு

## தமிழ்நிலா

தென்னோலைகளுக்கு இடையால நுழைஞ்சு வந்த நிலா வெளிச்சம் நிலத்தில விதவிதமான கோலங்களைப் போட்டிருக்கு. அதையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்க அந்த கோலங்களில நாய், பூனை,றைபிள் போல உருவங்கள் தெரிகிற மாதிரி இருக்குது. நான் இதப்பாத்து ரசிக்கிறது காத்துக்குப் பிடிக்கேல்லப் போல இருக்குது. அது ஓலைகள அசைச்சு, அசைச்சு கோலங்கள குழப்பிக் கொண்டிருக்கு வானத்த நிமிர்ந்து பார்த்தன். நிலவு என்னைப் பார்த்து சிரிக்கின்றது.

முற்றத்து மணலில கால்நீட்டி அம்மம்மா இருப்பா நான் அவான்ரை மடியில தலையை வைச்சுப் படுத்திருப்பன். இதப் பார்த்தா அண்ணாவுக்குப் பொறுக்காது. 'எழும்படி' எண்டு என்ன அங்கால இழுத்து விட்டிட்டு தான் அம்மம்மான்ர மடியில படுத்துக் கொண்டு அவா வின்ர சுருங்கிய கன்னத்தைப் பிடிச்சு இழுப்பான். 'சும்மா இரடா' எண்டு அம்மம்மா பேசுவா அண்ணாவ இழுத்து விட்டுட்டு நான் அவவின்ர மடியில படுத்திடுவன். மடியில படுத்துக்கொண்டு நிலவப் பார்ப்பன் அதுல கொஞ்ச இடம் கறுப்பா இருக்கும்.

"ஏனணை அம்மம்மா நிலவில கொஞ்ச இடம் கறுப்பா இருக்கு" எண்டு அம்மம்மாட்ட கேட்டா அவா சொல்லுவா "நிலவில ஔவைப்பாட்டி மரத்துக்குக் கீழ இருந்து கஞ்சி வடிக்கிறா"

எனக்கு ஔவைப்பாட்டியையும் மரத்தையும் வடிவாப் பார்க்க வேணுமெண்டு ஆசையா இருக்கும். ஆனால் அவையள் இரண்டு பேரும் கறுப்பு நிழலாத்தான் தெரிவினம். ஆத்திசூடிபாடின ஔவைப்பாட்டிய நேரில பார்க்க வேணுமெண்டு எனக்கு ஆசையா இருக்கும் இந்தப் பாட்டி ஒருக்கா எண்டாலும் என்னை வந்து பாத்திட்டுப் போகலாந்தானே. எண்டு, எனக்கு பாட்டிக்கு மேல கோபம் கோபமா வரும். மேகங்கள் வந்து நிலவ மறைச்சுது எண்டா எனக்கு மேகங்களுக்கு மேல கோபம் வரும்.

முழுசாய் சிரிச்சுக் கொண்டிருக்கிற நிலவு கொஞ்சம் கொஞ்சமா தேய்ஞ்சு போகேக்க எனக்கு கவலையா இருக்கும். கொஞ்ச நாளையில அது பிறகும் வளந்து வர எனக்கும் சந்தோசமா இருக்கும்.

நான் எங்க போனாலும் நிலவு எனக்குப் பின்னால வரும். இத அண்ணாட்டச் சொன்னா உனக்கு விசர். அது இருந்த இடத்தில தான் இருக்கு எண்டு சொல்லுவான். அவனுக்குத்தான் விசர் எண்டு நான் நினைப்பன். அண்ணா ஏன் அப்படிச் சொன்னவன் எண்டு இப்பதான் எனக்குத் தெரியுது.

முற்றத்து நிலவில எல்லாரும் இருப்பம். அம்மம்மா நிறையக் கதை சொல்லுவா. அவா கதை சொல்லேக்க 'ம்' போட்டுக் கேக்காட்டி கதை சொல்லமாட்டா. அண்ணாக்கு 'ம்ம்'எண்டு சொல்ல சரியான பஞ்சி நான் தான் 'ம்' போட்டு கதைய ரசிச்சுக் கேப்பன். தம்பி சும்மா இருந்து பெரிய ஆளப் போல தலைய ஆட்டிக் கொண்டிருப்பான். அம்மம்மா சொன்ன கதையள் இப்பையும் ஞாபகத்தில நிக்குது.

இப்படித்தான் ஒரு நாள் நல்ல நிலவு எறித்துக் கொண்டிருந்தது நானும், அண்ணாவும், தம்பியும் மணலுக்குள்ள வீடுகட்டி விளையாடிக் கொண்டிருந்தம் பக்கத்தில படுத்திருந்த றக்சி திடீரெண்டு எழும்பிக் குலைச்சுக் கொண்டு கேற்றடிக்கு ஓடியது. கேற்றடியில நாலைஞ்சு உருவங்களின் அசைவு தெரிஞ்சுது. நான் பயத்தில ஓடிப்போய் அம்மம்மான்ர சீலையால தலைய மூடிக் கொண்டு அவவுக்குப் பக்கத்தில நிண்டிட்டன் அந்த உருவங்கள் கேற்றைத் திறந்துகொண்டு வளவுக்குள்ள வந்திதுகள். குரைச்சுக்கொண்டு ஓடின றக்சி வாலைக் குழைத்துக் கொண்டு அவயளுக்குப் பின்னால வந்திது. 'ஆர்மோன அது'' எண்டு அம்மம்மா கேட்டா அது நான்எண்டு வந்த உருவங்களில ஒண்டு சொல்லிச்சு உடனே அந்தக் குரலக் கண்டுபிடிச்சிட்டன். அது வேறு ஒருத்தருமில்ல எங்கட சிவாச்சித்தப்பா தான்.

மைதானத்தில பந்தடிச்சு விளையாடிக் கொண்டிருந்த சிவாச்சித்தப் பாவையும், மற்ற மாமாக்களையும் பெரிய டிறக்குகளில வந்த ஆமி பிடிச்சுக் கொண்டு போயிற்றான்.

நாங்க எல்லா முகாங்களிலயும் போய்க் கேட்டுப்பாத்தம் "இஞ்ச இல்லை இஞ்ச இல்லை" எண்டு எல்லா இடத்திலயும் சொல்லிச்சினம். அப்பா எல்லா இடங்களுக்கும் அலைஞ்சு திரிஞ்சும் ஒரு பிரயோசனமுமில்லை. அண்டைக்குப் போன சித்தப்பா இண்டைக்குத் தான் வாரார்.

-சித்தப்பாவைக் கண்ட உடன நானும் அம்மம்மாவும் அழத் தொடங்கியிட்டம். சித்தப்பாட தலைமுடி அலையலையா நல்ல வடிவாய் இருக்கும். அதெல்லாம் மொட்டையடிச்சுப் போட்டாங்கள். செந்தழிப்பா எந்த நேரமும் சிரிச்சுக்கொண்டிருக்கிற சித்தப்பாட முகம் காஞ்சு வரண்டு போய் இருந்துது. அவரோட வந்த மாமாக்களும் அப்பிடித்தான் இருந்திச்சினம்.

"அவங்கள் எங்களைக் கொண்டு போய் வைபோசா ரெயினிங் தந்தாங்கள் நாங்கள்தப்பி ஓடிவந்திட்டம். எங்கட உரிமைக் காகப் போராடுற எங்கட பொடியளோ போய்ச் சேரப்போறம் எண்டு சித்தப்பா சொன்னார். சாப்பிட்டிட்டு சித்தப்பாக்கள் போயிற்றினம்.

எங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற அம்மன் கோயிலில ஆவணி மாதங் களில பெரிய பூசை வைக்கிறவைய. இரவிரவா பெரியாக்கள் புக்கை மோதகம் செய்வினம். பால்போல நல்ல நிலவா இருக்கும். நாங்கள் எல்லாம் தாச்சி மறிச்சு விளையாடுவம். எங்கட அண்ணா நல்லா தாச்சி மறிப்பான். நான் தான் ஒரே கிளி விடுறனான் . அந்த நிலவுக்குள்ள எவ்வளவு சந்தோசமா விளையாடுவம். அந்தக் காலமெல்லாம் மலையேறிப்போச்சு

இப்ப ஊருக்குள்ள துப்பாக்கி வேலிகளும், கெல்மட் தலைகளும்.... இப்ப ஊருக்குள்ள எறிக்கிற நிலவு "காட்டில எறித்த நிலாப் போல" தான் இருக்கும்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்தில நிகழ்ச்சி நடந்ததால வீட்டவர நல்லா இருண்டு போச்சு கருகல் பொழுதா இருந்தது. நான் பயந்து பயந்து தனிய வந்துகொண்டிருந்தன் எனக்கு முன்னால ஒரு கறுப்பு உருவம் அசைஞ்சு அசைஞ்சு வந்து கொண்டிருந்தது. நான் திடுக்கிட்டு அந்த இடத்திலயே நிண்டிட்டன். பயத்தில நாக்கு வரண்டு போச்சு உடம்பெல்லாம் வேர்த்து கொட்டிச்சுது. உருண்டை போல ஏதோ ஒன்று நெஞ்சிக் குள்ள வந்து அடச்சுது சனியன் பிடிச்ச இருட்டு நிலவெண்டா இப்பிடியெல்லாம் நடக்குமே நிலவுக்கு மேல எனக்கு இருந்த பாசம் இன்னும் கூடிட்டுது அந்த உருவம் என்ன நோக்கித்தான் வந்து கொண்டிருந்திது. அதுக்கு கால் இருக்கா எண்டு பாத்தான். கால் இருக்கிற மாதிரியும் தெரிஞ்சிது இல்லாத மாதிரியும் தெரிஞ்சிது அந்த உருவம் எனக்கு கிட்டவந்திட்டுது நான் அம்மா எண்டு கத்தினன். சத்தம் வெளியில வரேல்ல

"வந்திட்டியே மோனே உன்னைத்தான் தேடிக் கொண்டு வந்தனான் என்றது அந்த உருவம். வந்தது கொள்ளி வாய் பேயில்ல. எங்கட அம்மப்பாதான் சுருட்டுப் பத்திக் கொண்டு வந்தவர். நிலவெண்டா நான் இப்பிடி பயந்திருக்கமாட்டன்.

வீட்டபோய் நடந்ததச் சொல்ல அண்ணா விழுந்து விழுந்து சிரிச்சான். பயந்தாங்கொள்ளி எண்டு என்னைப் பகிடி பண்ணினான். உண்மைதான் எனக்கு அப்ப சரியான பயம். இருட்டு நேரத்தில வெளியில வரமாட்டன். எல்லாரும் வெளியில இருந்தா நான் இருட்டு வீட்டுக்குள்ள போக மாட்டன் யன்னலுக்கால வெளியில பார்த்தா கொய்யா மரத்தில கனக்க உருவங்கள் குந்திக்கொண்டு இருக்கிற மாதிரித் தெரியும். நான் யன்னலைச் சாத்திப் போட்டுத்தான் படுக்கிறனான். இப்ப நினைக்க சிரிப்பாய் இருக்கு.

நிலவு காலமெண்டா எனக்கு நல்ல சந்தோசம். ஆனா .. அண்டைக்கு நிலவு நேரம், நாங்கள் எல்லாரும் முத்தத்தில இருந்து விளையாடிக் கொண்டு இருந்தம். திடீரெண்டு வளவுக்குள்ள புகுந்த ஆமி அப்பாவப் பிடிச்சு அடிச்சாங்கள். நாங்கள் அப்பாவ அடிக்காதீங்கோ எண்டு அழுதம். அப்பாவ அடிக்க விடாம இடையில போய் நிண்ட அம்மாவ ஒரு ஆமிக்காரன் பிடிச்சு தள்ளி விட்டான் அம்மா சிவரில மோதுப்பட்டு விழுந்தா. அவாட மூக்கால ரத்தம் கொட்டிச்சுது. அவங்கள் அப்பாவ இழுத்துக் கொண்டு போனாங்கள்.அம்மம்மா பெரிசா அழுதா நாங்களும் அழுதம். அவங்கள் அப்பாவக் கொண்டு போயிற்றாங்கள். அதுக்குப் பிறகு வந்த நிலவு எங்களுக்குச் சந்தோசத்த தரேல்ல.

சண்டையில நிக்கேக்க இருட்டுத்தான் எங்கட நடவடிக்கைகளுக்கு தோழனாய் இருந்து உதவி செய்தது. வேவுக்குப் போகேக்க ஆமிக்குத் தெரியாம எங்கள் ஒளிச்சு வைச்சிருக்கும். நான் இருட்ட நேசிக்கத் தொடங்கினன். இந்த இருட்டுத் தான் தமிழர்களின்ர வாழ்வில வெளிச்சத்துக்குக் கொண்டு வர எங்களுக்கு உதவு கின்றது.

என்னைப்பார்த்துச் சிரிச்சுக் கொண்டிருக்கிற நிலவு எனக்குப் பல கதைகளைச் சொல்லுகின்றது. சந்தோசமா சிரிச்சுக்கொண்டிருந்த நிலவ திடீரெண்டு வந்த கருமேகக் கூட்டம் மறைச்சுப் போட்டுது. சந்தோசமாய் வாழ்ந்து வந்த நாகர்களின் வாழ்க்கையில் விஜயனின் வருகை ஏற்படுத்திய தாக்கம் போல .. . கருமேகங்கள் மறைந்ததும் நிலவு மீண்டும் சிரிக்கும். தமிழர்கள் சிரிக்கும் காலம்....



## மாத்திரைக் கதைகள்

### தோல்கள்



பாம்பு தோலை கழற்றி
வைத்துவிட்டுப் புறப்பட்டது.
ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்த
பக்கம் அது போனது.
அங்கே நின்ற தனியன் ஆட்டிடம்
'அதோ பார்.. பாம்பு
உன்னுடையவர்கள் இருக்கும்
இடத்தை நோக்கித்தான்
போகிறது.
நச்சுப் பாம்பு - பல்பட்டாலே
போதும்'..
என்று கூறியது சேவல்
'அப்படி ஒன்றும் நடந்துவிடாது...
பாம்பு தோலைக் கழற்றிப் புதிதாய்ப் பிறந்திருக்கிறது'.
சிறிது நேரத்தில் -
ஆடுகளின் அலறல் புல்வெளியை உலுக்கியது.
ஓசை வந்த திசை நோக்கி தனியன் ஆடும் சேவலும் ஓடின.
அங்கே -
பாவம்... அப்பாவி ஆடுகள் இரண்டு பாம்புக்குப் பலியாகிச் செத்துக்
கிடந்தன.
சேவல் சொல்லியது:-
'பல்லைக் கழற்றாத பாம்பு
தோலைக் கழற்றி என்ன?
வாலைக்கழற்றி என்ன?



### ஒழுங்கு

தலைமை எறும்பு கூறியது:-
'ஒழுங்காகச் செல்லுங்கள் .... பரிசு
உங்களுக்கு காத்திருக்கிறது'
ஓர் எறும்பு-
'என்பாட்டில் நான் போவேன்..' என்று
வரிசையை
உடைத்துக் கொண்டு தனிவழி
போனது
கொஞ்சநேரத்தில் -
வரிசை குலையாமல் போன எறும்புகளெல்லாம் வாயில்
அரிசியோடு திரும்பி வந்தன.
ஒற்றை எறும்பின் முகம் ஒடுங்கியது.
நிரை குழம்பாத எறும்புகளில் ஒன்று சொன்னது:-
'வரிசை பிளப்பான்
பரிசை இழப்பான்'

உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன்

# ஓர் ஆத்மாவின் குரல்



ஆதிலட்சுமி சிவகுமார்

அழுந்து தொங்கும் நாவிழையில்
ஓர் ஆத்மா ஊசலாடுகிறது
வலியடைந்து வலியடைந்து
கணமெல்லாம் வருந்துகிறது
எந்தக் கலப்புமில்லா வார்த்தைகளுக்காக
ஏங்கி நிற்கிறது
முகமூடியற்ற மனித முகம் தேடி
அலைந்து திரிகிறது..
பிரபஞ்ச வெளியெங்கணும் துயரச்..
சுமை சுமந்து பறக்கிறது.
கறையில்லா இரண்டு
கரங்களின் கலப்பிற்காக
போலியற்ற புன்முறுவலுக்காக
புரிந்துணர்வுள்ள ஒரு மென்னிதயத்துக்காக
தவம் செய்கிறது
பூமுக்கள் நெளியும் புன்னகைகளையும்
பொய்களை உற்பவிக்கும் மனங்களையும்
விஷம் கலந்த சிரிப்புகளையும்
வெறுக்கிறது.
ஒட்டுண்ணி வேர்களற்ற உயிர்
உறவுகளைத் தேடிநிற்கிறது

# உயிரில் தீ மூட்டி வல்லவருக்கு மயிரில் பிடித்திழுக்கும் மனதையார் உமக்கு?




வேலணையூர்

நில்!
நியார் எம்மை நிறுத்துவது?
ஊரின் மைந்தர் நாம்!
ஓரமாய் நிற்கும் பனையைக் கேள்
ஓவென்று இரையும் அலையைக் கேள்.
யார் நாமென்று அவை சொல்லும்

வாழ்ந்த நாளெல்லாம்...
வெள்ளைக் கடற்கரையில் மூழ்கியவர்
வாய் வரண்ட போதில் ....
வள்ளிக் காட்டுச் செவ்விள நீர் பருகியவர்.
பெருங்குளத்தம்மன் திருவிழாவில்
தேர் வடம் பிடித்தனர்.
ஊரின் மைந்தர் நாம்.

நில்!
நியார் எம்மை நிறுத்துவது?
துரோகத்தில் விளைந்த சதைக் கூடுகளே!
நரகப் பிறவிகளே...
நீயா அடித்து விழுத்தி விட்டுப் போக
செம்மண்ணை வெறும் செங்கற் தூணல்ல.
விடுதலை நெருப்பில் விளைந்த வைரம்.
கொள்கைக்குக் கட்டுப்பட்டதால் நீயா
கொடுத்ததைத் தாங்கினான்
இல்லையேல் நீ நின்ற இடம்
அக்கினிக் குதமாகி..
இன்னொரு 'கொலன்னாவ' பற்றியிருக்கும்
நிமிடத்திற்கு நாற்பது பகைவிழுத்த வல்லவரை
ஈ அடிக்கக் கூடப்.....
பலம் கெட்ட நீ அடிக்கவா? வெட்கம்!
மதங்கொண்டு அலைகின்ற
மாடுகளே! தீவின்
மானத்தை வாங்காது ஓடுங்கள்.
புதர்களாய் முளைத்திரெம்
பூங்கா வனத்துள்
இதற்குப் பின்னரும் உம்மை
இருக்க விடுவோமா?
இடுங்கி எறிவோம்!

## சொல்லியே தீர வேண்டும்



என்னத்தை சொல்லி யென்ன எங்கட தமிழ்ப்பிள்ளையளுக்கு எண்டைக்குத் தான் விடியப் போகுதோ?

# கல்வியா? அது என்ன? அது ஆருக்கு?...

"ஆல்ப முத்தா அங்க அரசு பழுத்தா இஞ்ச" எண்டு கொஞ்சப் பேர் இருக்கினம். இவயளின்ர திருகுதாளங் களால இல்லாத வீட்டுப் பிள்ளையளின்ர பாடு ஆத்தறுந்து போகுது பின்ன என்ன பாருங்கோ.

பிள்ளையளப் பள்ளியில சேர்த்துப் படிக்கவேணும் எண்டுதானே தாய் தேப்பன் நினைக்குதுகள். இந்தப் படிப்புக்கதானே விளையாட்டு.. ஆட்டம்.. பாட்டு.. எல்லாம் வருது. எல்லாப் பிள்ளையளுக்கும் கல்விகற்க உரிமையிருக்காம். எங்க, எங்கயிருக்கெண்டு கேக்கிறன். ஏதோ கதைக்கயுக்க மட்டும் வயுத்துப்பிள்ளை வழுக்கி விழுறமாரிக் கதை. மெய்யே. இந்த வரியம் விளையாட்டுப் போட்டியள்ள நடந்த கதை தெரியுமே. இந்த வரியம் ஏன் மூண்டாம் வரியம் பள்ளிக்கூடத்தில ஓடிவெண்டு - வலயமட்டத்தில வெண்டு - பிறகு கோட்ட மட்டத்தில ஓடவெண்டு மல்லாவியால புதுக்குடியிருப்புக்கு கொண்டு வந்த பிள்ளையள சிலதை ஓட விடயில்ல. ஏனெண்டு கேக்கயில்ல.. நிவாரணக்காட்டு கொண்டரயில் லயாம். எட ந ா ச ம று ப ் ே ப நிவாரணத்துக்கெண்டு குடுத்த காட்டிலயே - பிள்ளை படிக்கிது. ங பிறப்புச் சேட்டிப்பிக்கேற்றுக் காணாதே. ஊரை விட்டு ஊர் வந்து படிக்கிற பிள்ளையளுக்கு உரிமையுமில்லையே.

எட இது கிடக்க இந்த வரியம் உங்கால ஒரு பள்ளிக்கூடத்தில மரதன் ஓட்டம் நடந்ததாம். அதில ஆறாவதா வந்த பிள்ளையொண்டு தான் கோட்ட மட்டத்தில போய் முதலாவதா வந்ததாம். இதில மனவருத்தம் என்னண்டாப் பாருங்கோ ஓடி ஓடி முதலாரெண்டா மூண்டா நாலா அஞ்சா வந்த பிள்ளையள் எல்லாம் போயிருந்தா எப்பிடி இருந்திருக்கும். . ங் பாவம் அதுகளும் சின்னப் பிள்ளையள் அதுகளின்ர பிஞ்சு மனம் என்ன பாடுபட்டிருக்கும். ஏன் அதுகளைக் கழிச்சு விட்டிட்டு ஆறாவதா வந்த பிள்ளைய கொண்டு போனவையாம். நான் தானே சொடுசொடெண்டு சும்மா இருக்கமாட்டன் கேட்டுப்போட்டன். அதுகளுக்கு ... ஐசீயில்லயாம். பாசெடுக்க வசதியுமில்லயாம். இதொரு கதையே - வாத்திமார் பொறுப்பு நிண்டு செய்ய வேண்டிய வேலெயெல்லே. நீங்க சொல்லுறியள். உந்த ஓயெல் சோதினை யெழுத பள்ளிக்கூடத் தால ஐசீ பதியினம். பதியினம் பதியினம் அப்பிடிப் பதிவினம். பிறகென்னண்டா சோதினை கிட்ட வரத்தான் எல்லாம் அத்தடிப்பட்டு ஓடித்திரியுங்கள்! போஸ்ரல் எடுக்கவெண்டு ஓட்டிக்கு ரெட்டி சிலவு.

இந்தக் கதைய இப்பிடியே வச்சுக் கொள்ளுங்கோ மறந்திராம - வவுனியாவுக்க போய் இன்னுமொரு விசயம் கேள்விப்பட்டன். பள்ளிக்கூடத்தில பிள்ளையளைக் கொண்டே சேர்க்கிறதுக்கு இருக்கிற போட்டிய, நாளாந்தங் கூலிவேலை செய்யிற எங்கட செல்லையா நாயா அலைஞ்சும் பள்ளிக்



கூடத்தில இடமில்லாமப் போச்சு. எங்கட ராமசாமி முதலாளி போய் பிறிஞ்சிப்ப ரோட கதைச்சுக் கொண்டிருக்கயுக்கயே "உந்த முன்மதில நான் கட்டித் தாறனே" எண்டு சொன் னார். அவ்வளவுதான் அண்டைக்கே அட்மிசன் கிடைச்சிட்டுதே... பள்ளிக்கூடத் துக்குப் பிள்ளையள் ஆட்டோவில போகுதுகள். அதேமாரி ரியூசனுக் கும் போகுதுகள். வசதியில்லா தவை இலவசக் கல்வியெண்டு சொல்லிப் பாத்துப் பசியாற வேண்டியதுதான். இதோட இன்னு மொண்டு. ஆங்கில மொழிமூலக் கல்வியெண்டு ஒண்டு வந்திருக்கு. ஆனா எத்தின பள்ளிக்கூடத்தில இங்கிலீசு வாத்திமார் இருக்கினம். நகரத்துக்க கிடக்கிற பள்ளிக் கூடங்களிலயே இங்கிலீசு வாத்திமார் இல்லை. நாலு பள்ளிக்கூடத்துக்கு ஒரு வாத்தியார் எண்டும் சில பாடங்களுக்கு இருக்கு. கிடக்கட்டும் நாங்கள் எங்கட கதைக்கு வருவம்.

பின்ன விளையாட்டுப் போட்டியெண்டே சொன்னனான். ஓடி விளையாடி என்ர பிள்ளை வெற்றியெடுக்கோணும் எண்டு தானே எல்லாத் தாய்மாரும் விரும்புவினம். எங்கட ஊரில தங்கம்மா தங்கம்மாவெண்டு ஒரு மனிசி அப்பஞ்சுட்டு விக்கேல்லயே.. அ .... அவவின்ர பேத்தி. மனிசிமோ ளையும் நெருப்புத்திண்டுதானே வளர்த்தது. இப்ப பேத்திக்கும் உழைக்கிது. அவன் மருமேன் காறன் ஆன உழைப்பில்ல. பேத்திக்காறி இந்த வரியம் உந்த விளையாட்டுப் போட்டியளில பங்குபற்றினவளாம். மனிசிக்கு பெட்டை வெண்டது புழுகுதான். ஆனா - மோதிரத்தை அடைவு வச்சுத்தான் வலயமட்டத்தில ஓடவிட்டதாம். உடுப்புகள் செருப்பு கள் பயணங்க ளெண்டு போட்ட சீட்டையுங் கழிச்சுத்தான் எடுத்துச் சமாளிச்சது. இதோட போச்சே பொடிச்சி அதிலும் வெண்டிட்டா ளாம். மனிசி தலையில கை வைச்சழுகுது "நான் ஆற்ற தாலிய விக்க"வெண்டு. பெடிச்சி திருக்கணாமலைக்கு போக ரெண்டாயிரம் ரூவா வேணுமாம். மாசம் முழுக்க ஓயாம உழைச்சாலும் மனிசி முழுசா ரெண்டா யிரத்தைக் காணுமோ தெரியாது. பின்ன உதுக்காக பிள்ளைய வீட்டில மறிக்க ஏலுமே. எட இப்பிடிச் சிலவு வருமெண்டு ஏற்கெனத் தெரிஞ்சிருந்தாலும் ஓடிச்சாடி மாறலாம். விடியக் கலியாணம் பிடி வெத்தில பாக்கு எண்டு தானே சொல்லுறது. கனக்க என்னத்துக்கு பிள்ளையளட்ட இவ்வளவு சுமைய ஏத்திப்போட்டு பிறகேன் இலவசக்கல்வி எண்டு சொல்லுகினம். எல்லா ஏற்பாடும் கல்வியமைச்சுத் தான் செய்ய வேணும் எண்டு இருக்கு - ஆனா தமிழ்ப்பிள்ளையளுக்கு அது இல்லைப் பாருங்கோ.

ஏதோ இளைஞர் சேவை யெண்டும் நல்லெண்ணெப் பயண மெண்டும் வடக்குக் கிழக்கால வயதுக்கு வந்த பொடிபெட்டை யளக் கூட்டிக் கொண்டேவிருந்து வைக்கினம். ஆனா வசதி யற்றுப்போய் கிடக்கிற இந்த மாரிக் குடும்பங்களை ஏன் கவனிக்கின மில்லை.

என்னமோ படத்தில வந்தமாரி படிச்ச வசதி யுள்ள பெற்றாரின்ர பிள்ளையளுக் குத்தான் எல்லாம் எண்டால்...

மாயா

ஆண்டான் அடிமைப் பாரம்பரியம் மீண்டும் வரப்போகுதோ.

நாட்டோட கிடந்து நாய் படும்பாடு பட்டவை நாங்கள் ஆனா ஊரை விட்டு தேசாந்திரம் போய் உழைச்சவைக்குதான் இப்ப காலம். கைக்காசு சிலவழிக்க வழியில்லை யெண்டா எதுவுமே கிட்டாது. இது தாண்டா உலகம். எண்டு விடப் போறியளே. அது சரி வராது; நாளைக்கு உந்த சிலவு சிலவழிச்சுப் படிச்சு பட்டம் வாங்க முதல் பாஸ்போட்டும் விசாவும் வச்சுக்கொண்டு உலகத்தில உள்ள மேலாண்மை நாடுகள் வரப் போகுது. பின்ன - படிக்கிற பிள்ளையளக் கணிப்பீட்டுக் கயெல்லே வச்சிருக்கினம். ஆடு மாடு, கோழியள்ள தரம் பாத்தமாரி மனித மூளையும் தரங்கணிக்கினம். திறம் மூளையள் ஏற்றுமதி யாப் போகுது. பின்னயேன் பாருங்கோ - ஆங்கில மொழிமூலக் கல்வி - தமிழ்ழயோ சிங்களத்திலயோ படிச்ச மூளைய இறக்குமதி செய்து, பிறகு அந்த மூளைய இங்கிலீசில பொலிஷ் பண்ண நேரமும் கூட செலவும் கூட் டிட்டீ இங்கிலீசிலயே தயாரிச்ச மூளையெண்டா ஏற்றுமதி எங்களுக்கு சுகம். இறக்குமதி செய்யிற வைக்கும் லாவம்.

பின்ன இந்த அளவில திட்டம் போட்டுத்தான் பள்ளிக் கூடங்களில கலாச்சாரங்களும் கல்வித் திட்டமும் போகுது. பள்ளிக்கூடம் போகாம இருக்கிற பிள்ளையளின்ர கதை வேற படிக்கேல்லயே எண்ட வேதனை மட்டுந்தான். பள்ளிக்கூடம் போற பிள்ளையளின்ர பாடு சீருடைக்கு மேலால தெரியிற செல்வச் செருக்குகளுக்கு முன்னால கூசிப்போய் நிக்குதுகள். இதுகளோட போட்டிபோட ஏலாட்டி என்ன செய்யிற. கேட்டிக்கம்ப கையில எடுத்தா - மாடுசாய்க்க வேண்டியது தான். அதுகுந்தான் எங்க இப்ப எல்லாம் கொம்பூட்ட ரெல்லே. படிப்பறிவு எண்டது என்ன? ஆருக்கு?

# ஒல்லாந்த நிர்வாகத்துக்கு அடிபணியாத இலங்கை நாராயண வன்னியனார்

தமிழ்மணி, முல்லைமணி
வே.சுப்பிரமணியம்



வன்னிப்பிரதேசம் ஈழத்தின் பல பாகங்களிலும் பரந்திருந்தது. அடங்காப்பற்று, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வன்னி மைகள் இருந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகளுண்டு. இவற்றை விடச் சிங்களப் பிரதேசங்களிலும் வன்னிமைகள் இருந்திருக்கின்றன. இங்ஙனம் இராஜரட்டை, மாயரட்டை, ரோகணம் ஆகிய இலங்கையின் பல பிரிவுகளிலும் வன்னிமைகள் இருந்தபோதும் அடங்காப்பற்றே வன்னி என்னும் பெயருக்கு உரிமை பூண்டு நிற்கிறது.

வன்னிப்பிரதேசம் மிகவும் பழைமையான வரலாறுள்ள பிரதேசம். ஈழத்தமிழர்களின் வரலாற்றில் வன்னியின் வரலாறு மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. “கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே இங்கு சிற்றரசுகள் சில தோன்றி இருந்தன. இற்றைக்கு ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வன்னியில் நாகமன்னன் என்பானும் அவனுடைய மகள் அநுராதியை மணம் முடித்த உத்திமன்னன் என்பானும் ஆட்சி நடத்தியது பற்றிப் பெரிய புளியங்குளத்திலுள்ள நான்கு கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இவர்கள் காலத்திலே வன்னியிலிருந்த தமிழ் வணிகன் விசாகன் போன்ற பல பிரமுகர்கள் பற்றியும் பிறர் பற்றியும் அறிவதற்கு இதுவரை 54 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவர்கள் காலத்தின் பின் வன்னிக் குறுநில அரசுகள் வீழ்ச்சியடைய அநுராதபுர மன்னரது ஆதிக்கம் அங்கு பரவியது. அநுராதபுரத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் மீண்டும் வன்னிச் சிற்றரசுகள் எழுச்சி பெற்றன” எனப் பேராசிரியர் கா.இந்திரபாலா குறிப்பிடுகின்றார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை வட இலங்கையில் வன்னிச் சிற்றரசுகள் இருந்திருக்கின்றன. “வட இலங்கையில் யாழ்ப்பாண அரசு எழுச்சிபெற முன்பே வன்னிமைகள் தோன்றியிருந்தன” எனப் பேராசிரியர் சி. பத்மநாதன் கூறுகின்றார்.

### அடங்காப்பற்று வன்னிமைகள்

வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும், தெற்கே அருவியாற்றையும், நுவரகலவிய மாவட்டத்தையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும், கிழக்கே திருகோணமலை மாவட்டத்தையும் எல்லையாகவுடைய பரந்த பிரதேசம் அடங்காப்பற்று என அழைக்கப்பட்டது.


இப்பிரதேசம் செட்டிகுளம், பனங்காமம், மேற்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, தென்னன் மரவடி, கருநாவற்பற்று என்னும் வன்னிமைகளை உள்ளடக்கியது. இப்பிரதேச ஆட்சித்தலைவர்கள் வன்னிபம், வன்னியனார் என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டனர். நாட்டுப்பற்றும் வீரமும் அஞ்சாநெஞ்சும் சுதந்திர வேட்கையும் உடையவர்களாக இவர்கள் திகழ்ந்தனர். பெயரளவில் யாழ்ப்பாண அரசின் ஆணைக்கு உட்பட்டதாக இருந்தபோதும் நடைமுறையில் இவர்கள் சுதந்திர ஆட்சித் தலைவர்களாகவே இருந்தனர். யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளும் பின்னர் வந்த போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் வன்னிமைகள் மீது தமது மேலாணையை நிலைநிறுத்தும் நோக்குடன் இவர்களிடம் திறை பெற விரும்பினர். ஆண்டுதோறும் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தர்பாருக்கு சமூகமளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். இவர்களில் சிலர் திறை செலுத்த ஒப்புக்கொண்ட போதும் அவற்றை ஒழுங்காகச் செலுத்தாமலும் பின்போட்டும் வந்தனர். இன்னும் சிலர் முற்றாகத் திறை செலுத்துவதைத் தவிர்த்தனர்.

வன்னியர்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்ப குடை, கொடி, கவசம், படைக்கலம் முதலியவற்றையும், சிறப்புச் சின்னங்களையும் வரிசைகளையும் கொண்டிருந்தனர். ஆதிக்கம் செலுத்துவதற்கு ஏதுவான படைபலத்தையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆட்சியுரிமை பரம்பரை வழியாக இருந்தது. நிர்வாகத்திற்கும் நீதிபரிபாலனத்துக்கும் அவர்களே பொறுப்பாக இருந்தனர். தமது ஆள்புலத்தில் எல்லா அதிகாரிகளையும் அவர்களே நியமித்தார்கள்.

வன்னித் தலைவர்களில் கயிலை வன்னியன் பண்டார வன்னியன், இலங்கை நாராயண வன்னியன் முதலானோர் பலவிதத்திலும் சிறப்புடையவர்கள். காக்கை வன்னியன் என்னும் ஒருவன் வன்னிமைகளில் என்றும் ஆட்சி புரிந்ததற்குச் சான்றில்லை. போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆவணங்களிலும் இப்பெயர் இடம் பெறவில்லை. ஊர்காவல்துறைத் தலைவனாகக் காக்கை வன்னியன் இருந்தான் எனப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ‘சங்கிலி’ நாடகத்தில் குறிப்பிடுகிறார்.

### இலங்கை நாராயண வன்னியன்

வன்னி நாட்டுக் குறுநில மன்னன் ஒருவன் சிதம்பரத்திற்குத் தானமளித்ததைப் பற்றிக் கள்ளியங்காட்டுச் செப்பேடு குறிப்பிடுகின்றது. இது கயிலை வன்னியனார் சிதம்பர தரும சாதனப் பட்டையம் என அழைக்கப்படுகின்றது. 1722ஆம் ஆண்டைச் சேர்ந்த இப்பட்டையம் கயிலை வன்னியனார் பேரில் அவருக்குப் பின் வந்த வன்னியர்கள் சிதம்பரத்திற்கு அளித்த தானம் பற்றியது.



மன்னார் கோட்டை
அமைப்பு


இப்பட்டையத்தில் பல வன்னிக் குறுநில மன்னர்கள் பற்றிய குறிப்பு ண்டு.

“...சுபகிருது வருஷம் சித்திரை மாதம் 22ஆம் திகதியும் பூர்வ பட்சத்தில் பறுவமும் சுவாதி நட்சத்திரமும் குருவாரமும் கூடின சுபதினத்திலே சிதம்பரம் பரராசசேகர மகாராசாவின் கட்டளை நடத்தும் சூரிய மூர்த்தித் தம்பிரான் அவர்களுக்குப் பனங்காமத்து வன்னிபம் நிச்சயச் சேனதிராய முதலியார் அவர்களும், குலசேகர முதலியார் அவர்களும், கரிக்கட்டு மூலைப் பத்து, தென்னமரவடிப்பத்து வன்னிபம் புவிநல்லமாப்பாண வன்னியனார் அவர்களும், புண்ணியப் பிள்ளை வன்னியனாரவர்களும் மேற்பத்து வன்னிபம் ரணசூர ரணத் ரராக வன்னியராய முதலியார் அவர்களும், கந்தையினா வன்னியனாரவர்களும் மேற்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கை நாராயண முதலியார் அவர்களும் மயிலாத்தை உடையார் அவர்களும் ... இவர்களும் இவர்களைச் சேர்ந்த ஊரிற் குடியானவர்களும் தங்கள் கயிலைப் பிள்ளை வன்னியனார வர்கள் மடதருமத்துக்குத் தர்ம சாதனப் பட்டையம் குடுத்தபடி கமத்துக்கு மூன்று மரக்கால் நெல்லு மடதருமத்துக்குச் சந்திரா தித்திய வரைக்கும் புத்திர பவுத்திர பாரம்பரியமும் குடுத்துவரக் கடவோமாகவும்...”

இச்செப்பேட்டில் குறிப்பிட்ட “மேற்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கை நாராயண முதலியார் அவர்களை ஒல்லாந்துக் குறிப்பில் காணப்படும் தொன்கஸ்யபார் இலங்கை நாராயண முதலியாருடன் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது”என செ.குணசிங்கம் கூறுகின்றார். ஒல்லாந்தக் குறிப்பில் தொன்கஸ்பார் எனக் குறிப்பிட்ட் அவரை ஒரு கிறிஸ்தவர் என நிலை நாட்ட முனைவது கவனிக்கத்தக்கது.

ஒல்லாந்தக் குறிப்புக்களில் கயிலை வன்னியனைத் தவிர ஏனைய வன்னியர்களின் பெயரின் முன்னால் கிறிஸ்தவப் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவர்களே சிதம்பரத்திலுள்ள சைவ ஆலயத்திற்குத் தானம் செய்திருக்கிறார்கள். ஒல்லாந்த அதிகாரிகள் தமது தலைமைப் பீடத்திற்கு அனுப்பும் அறிக்கைகளில் வன்னித் தலைவர்கள் மதம் மாறித் தமக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகக் கிறிஸ்தவ பெயர்களைச் சூட்டியுள்ளனர் என்றே கருதலாம்.

இலங்கை நாராயணர் வன்னிபப் பதவியைப் பெறுவதற்கு முன்பு முதலியாராகஇருந்திருக்கிறார். வன்னிப் பதவி பெற்றபின்பும் முதலியார் என்ற முந்திய பதவிப்பெயர் நிலைத்திருக்கிறது. இதனாலேயே முள்ளியவளை மேற்பற்று வன்னிபம் இலங்கை நாராயண முதலியார் எனக் குறிப்பிடப்படுகின்றார். ஒல்லாந்தக் குறிப்பின்படி பனங்காம வன்னிபம் நல்லமாப்பாணரின் மருமகனாக




பூநகரி கோட்டை
அமைப்பு

இவர்இருந்திருக் கிறார். சிலவேளை நல்லமாப்பாண வன்னியனாரின் மகளை இவர் மணஞ் செய்திருக்கலாம். இத்தகைய உறவுமுறை மேற்பற்று, முள்ளியவளை வன்னிபப் பதவியைப் பெறுவதற்கும் பின்னர் பனங்காம வன்னிப் பதவியைப் பெறுவதற்கும் உதவியிருக்கலாம்.

இலங்கை நாராயண வன்னியனார் ஒல்லாந்தருக்கெதிரான நட வடிக்கைகளை மேற் கொண்ட வன்னியர்களுள் குறிப்பிடத்தக்கவர். 1697 ஆம் ஆண்டில் ஒரு கூட்டத்திற்குச் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டபோது ஏனைய வன்னியர்களான நல்லமாப்பாணர், புவிநல்லமாப்பாணர், அம்பலவாணர் ஆகியோருடன் சேர்ந்து இலங்கை நாராயணரும் செல்லவில்லை. ஒல்லாந்த ருக்குக் கொடுக்கவேண்டிய திறையான யானைகளை ஒழுங்காகச் செலுத்தவில்லை. ஒல்லாந்தரை ஏமாற்றுவதில் இவர் ஆர்வம் காட்டியுள்ளார்.

1697 ஆம் ஆண்டு ஒல்லாந்த அறிக்கையின்படி நாம் இவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

1697ஆம் ஆண்டில் றைக்கு லொவ் டி பீற்றர் என்ற ஒல்லாந்த அதிகாரி நல்லமாப்பாணரையும் இலங்கை நாராயணரையும் அழைத்து அவர்களுக்கிடையேயான பகைமைக்கான காரணத்தை அறிய விரும்பினார். நீண்ட நேரம் அவர்களுடன் உரையாடியபின் அவர்களுக்கிடையே எவ்விதபகைமையும் இல்லையென்பதனையும் ஒல்லாந்தரை ஏமாற்றுவதற்காகக் காட்டப்பட்ட போலிப் பகைமை என்பதையும் அறிந்து கொண்டார்.

திறையைச் செலுத்தாமைக்குரிய காரணத்தைக் கேட்டபோது அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டினர். முதலில் கொடுக்கவேண்டிய யானைத் திறை கள் அனைத்தையும் செலு த்திவிட்டதாகக் கூறினர். நல்லமாப்பாணர். தாம் திறை செலுத்தியதற்கு ஆதாரமான பற்றுச்சீட்டைக் காட்டினார். செய்வதறியாது திகைத்த இலங்கை நாராயணர் தமது பங்கையும் நல்லமாப்பாணரே செலுத்தியிருக்க வேண்டும். என்று சாட்டுச் சொன்னார்.

எனினும் இலங்கை நாராயணருக்கெதிராக எந்த நடவடிக்கையையும் ஒல்லாந்தர் எடுக்கவில்லை. வன்னியர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தால்அவர்கள் கண்டியரசனுடன் சேர்ந்து தம்மை எதிர்க்கக் கூடும் என அஞ்சினர். திறை களை ஒழுங்காகச் செலுத்தாவிட்டாலும் தமது மேலாணையை வன்னியர்பெயரளவிலேனும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே ஒல்லாந்தரின் கொள்கையாக இருந்திருக்க வேண்டும். இலங்கை நாராயணரும் நேரடியாக ஒல்லாந்தரை எதிர்க்காமல் அவர்களின் ஆணையை மறைமுகமாகத் தட்டிக் கழித்தார் என்றே கருத இடமுண்டு. இவ்வாறு இராஜதந்திர முறைகளைக் கையாண்டு வன்னிமையின் சுதந்திரத்தைக் கட்டிக்காத்தவர் இலங்கை நாராயண வன்னியராவார். ⊙

# திரண்டு வரும் வெண்ணெய்த்தாழியைப் போட்டுடைக்க முயலும் ஜெயலலிதா

"நான் விடுதலைப்புலிகளை நேற்றும் ஆதரித்தேன் இன்றும் ஆதரிக்கிறேன். விடுதலைப்புலிகளை நாளையும் ஆதரிப்பேன்" என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோ. மதுரையில் நடைபெற்ற கட்சிப் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றியதை அடுத்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டது. கடந்த வாரம் தமிழக அரசியலில் மட்டுமல்லாது தமிழ் மக்கள் வாழும் உலக நாடு களிலும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

இது ஜெயலலிதாவால் மேற் கொள்ளப்பட்ட அரசியலில் அதி ரடி என்று கூட சொல்லலாம் இதற்கு முன்னரும் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி புலி களுக்கு ஆதரவு வழங்குவதாக குற்றம் சாட்டி கைது செய்து தனது அரசியல் பணியில் நெஞ்சை விட்டகலாத நிகழ் வொன்றை அரங்கேற்றியிருந்தார்.

இவ் விரு கைது நடவடிக்கை களும் ஜெயா வின் அரசியல் போக்கினை சற்று திரும்பி பார்க்க வைத்துள்ளது.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை தமிழ் நாட்டில் முறியடிக்க தமிழ் நாட்டு அரசுக்கு மத்திய அரசு விசேட அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும் வெளி நாட்டவர் சட்டத்தில் புதிய திருத்தமொன்றை செய்யுமாறும் பிரதமர் நரசிம்மராவின் காலப்பகுதியில் கேட்டிருந்தார்.

2000ஆம் ஆண்டு யூலை மாதம் ஜெயலலிதா விடுத்திருந்த அறிக்கையொன்றிலும் கூட ம..தி.மு.க., தி.மு.க. கட்சிகளை தடைசெய்ய வேண்டும் என்றும் வை. கோ. மற்றும் மு.கருணாநிதி ஆகியோரை கைது செய்ய வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் ஜெயலலிதா தவறாது குறிப்பிட்டிருந்தார்.


ம.தி.மு.க.வின், வை. கோ. ஈரோடில் நடாத்திய ஒரு மாநாட்டின் பின்பே ஜெயலலிதா இவ்வாறு ஒரு அறிக்கையை விட்டிருந்தார்.

ஜெயலலிதாவின் இரு கனவுகளும் ஏதோ ஒரு வகையில் தற்போது நனவாகியிருக்கின்றது. தமிழக அரசு தனது அரசியல் சுய இலாபத்திற்காக தனிப்பட்ட நபர்களை பழிவாங்குவதென்பது இதனூடே தெளிவாகின்றது.

ஆனால் இவ்வாறு விடுதலைப்புலிகளின் நடவடிக்கைக்கு எதிராக அறிக்கை விடுவதும் விடுதலைப்புலிகளை ஆதரிக்க எத்தனிப்பவர்களை கைது செய்வதுமாக இருக்கும்

**எஸ்.வி.ஆர். கஜன்**

ஜெயலலிதா 1998 டிசம்பரில் சென்னையில் ஈழத்தமிழர் படுகொலை கண்டன மாநாடு நடைபெற்றபோது "இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகி தமிழ் மக்கள் தங்களது உயிர்களையும், உடைமைகளையும் இழந்து வருவது வேதனை அளிக்கின்றது என்றும் இம்மக்களை பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டு அனுதாப செய்திக் குறிப் பொன்றை அனுப்பியிருந்தார்.




இவ்வாறு இலங்கை தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஜெய லலிதா இதயச்சுத்தியுடன் அனு தாபம் தெரிவித்திருந்தால் அம் மக்களின் விடுதலை உரிமைக் காக போராடும் விடுதலை இயக் கத்தை தடை செய்யவும் இவ் விடுதலை இயக்கத்தை தமிழ் நாட்டில் ஆதரிக்க எத்தனிப்பவர் களை கைது செய்யவும் எடுத்து வரும் நடவடிக்கைகள் எதை உணர்த்துகின்றன.

இந்திய அரசியலில் அடுத்த தாக ஆட்சியை அமைக்கும் வாய்ப்பு பெரும்பாலும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு கிடைக்கும் என அரசியல் ஊகங்கள் தெரிவிக்கின்றன எனவே தனது நீண்ட அரசியல் நலனுக்காக ஜெயலலிதா இவ்வாறான முடிவுகளை எடுக்கின்றாரா என்ற கேள்வியும் எழாமலில்லை.

தற்போது ஏற்பட்டிருக்கும் புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்பு நடைபெற்றுவரும் அமை திச் செயற்பாட்டின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்று புரிந்துணர்வு செயற்பாடுகள் தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுக்களை நடாத்தி வந்திருக்கிறார். இந் நிலையில் ஜெயலலிதாவின் விடுதலைப்புலிகளுக்கு எதிரான செயற்பாடுகள் சிறிலங்காவின் பேரினவாதிகளுக்கு ஆதரவும் உற்சாகமும் செயற்பாடாகவே உள்ளன.

இதனிடையே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்த குழுவுக்கு தலைமை தாங்கியவரான முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் சமீபத்தில் தமிழகம் சென்று ஜெயலலிதாவை சந்தித்த போது போர் நிறுத்தத்தை மீளாய்வு செய்து மீண்டும் யுத் தத்தை தொடருமாறு இலங்கை பிரதமர் ரணிலுக்கு இந்திய பிர தமர் வாஜ்பாயூடாக அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கதிர்காமர் ஜெயலலிதாவை இச் சந்திப்பின் போது கேட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இது இவ்வாறு இருக்க எம். ஜி. ஆரின் சுயசரிதை அடங்கிய நூல் ஒன்றை வெளியிடுவதற்கு சென்னை உயர் நீதிமன்ற நீதி பதி இடைக்கால தடை யொன்றை பிறப்பித்துள்ளார். எம். ஜி. இராமச்சந்திரனின் சுயசரிதையை வெளியிடவே ஜெயலலிதாவால் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ள இந்த வேளையில் இலங்கை இனப்பிரச்சினைக்கு இவரால் எவ்வாறான முடிவுகளை எடுக்க முடியும் என்பது சொல்லாமலே தெளிவாகின்றது.

இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினையில் ஆரோக்கியமற்ற அசைவுகளை மேற்கொண்டு வரும் ஜெயலலிதாவுடன் சனாதிபதி சந்திரிகாவால் அனுப்பப்பட்ட சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசனையின் பேரில் தமிழகம் சென்ற டக்ளஸ் தேவானந்தாவும் பேச்சுவார்த்தை நடாத்தியதாக தெரியவருகின்றது.

எது எவ்வாறாயினும் இலங்கை தமிழ் மக்களின் விடுதலைப் பக்கங்களில் "ஜெயா" வின் அசைவுகள் வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை போட்டுடைக்கும் செயலாக இருப்பதாகவே தோன்றுகிறது.

# ஊர்கோலம்

## கால்பதிப்பு

முகமாலை இராணுவ சோதனைச் சாவடியின் நடைமுறைகளை எதிர்கொண்டு விட்டுப் புறப்பட்ட அந்த வாகனம்- புதிய 'ஹைஏஸ்' வான் யாழ்ப்பாணம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அதில் வயதான ஒருவரும் அவரின் வயதான மனைவியும் அவர்களின் இருபுதல்வர்களும், மூத்தமகனின் மனைவியும் குழந்தையும் இருந்தனர்.

பலவருடங்கள் வெளிநாட்டு வாசம் முடித்து இப்போதுதான் முதன்முதலாக நாடு திரும்பிய இருபுதல்வர்களும் தமது பெற்றோரை வன்னியில் இருந்து அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் போய்க்கொண்டிருந்தனர்.

கைதடி- 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' வளைவு வந்ததும் வாகனத்தை நிறுத்தச் சொன்ன முதியவர் அதிலிருந்து கீழே இறங்கினார்... அவரைத் தொடர்ந்து அவரது மனைவியும்... 'ஏனப்பா இறங்குகிறீர்கள்... சரியான வெய்யிலெல்லே...' சாரதி பீடத்தில் அமர்ந்திருந்த மூத்தவன் கேட்டான். மகனை நிமிர்ந்து பார்த்த முதியவர்... 'ஏழு வருஷத்திற்கு முந்தி ஒரு நாள்' இரவு கால் நடையாய் நடந்து தான்... இந்த இடத்தைக் கடந்து வன்னிக்கு போனோம்.... இப்பவும் இதாலை நடந்து தான் யாழ்ப்பாணத்துக்கை நுழைய வேணும் போலை கிடக்குது... இப்ப இந்த மண்ணிலை இறங்கி நிக்கேக்கை ஒரு சந்தோஷம் வருகுது... அது உங்களுக்கு தெரியாது... வா நடந்து போவம் என்றபடி மனைவியை அழைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினார். வளைவோடு புதிதாக அமைக்கப்பட்டிருந்த காவலரணில் நின்ற 'ஆமிக்காரன்' சொன்னான்...

'இறங்கத் தேவையில்லை காரில் போகலாம்'

'என்ரை மண்ணிலை நான் நடந்து தான் போவன் அதைக் கேட்க நீ யார்' என கேட்க அவருக்கு மனம் அவாவியது.

-மௌனமாக நடந்தவர்...

-வாகனம் மெல்ல அவரைப் பின் தொடர்ந்தது

-ஆமிக்காரனுக்கு அவரது உணர்வைப் புரிந்து கொள்ள முடியாது.

## தெருவழியே கேட்டவை...



1

கிளிநொச்சி குளத்தில் நின்று இருவர் பேசிக்கொண்டனர். 'என்னப்பா குளிக்க வந்திட்டு இப்ப யோசித்துக் கொண்டிருக்கிறாய்?'

'கொஞ்சம் முந்தித்தான் பேப்பரிலை பார்த்தன். இந்தக் குளத்திலை முதலைகள் இருக்குதாம்...'

'அதுசரி இவ்வளவு நாளும் குளிச்சனிதானே... இப்ப ஏன் பதறுறாய்...'

'இவ்வளவு நாளும் பேப்பரிலை போடேல்லையே... இப்பதானே போட்டிருக்கிறாங்கள்...'

2

'சந்திரிகா தனக்கு பேப்பரிலை 44 ஆடம்பர வாகனங்களை கொள்வனவு செய்து வைத்திருந்தாவாம்...'

'அதுக்கென்ன அவவின்ரை தமிழ்நாட்டு சகோதரி ஜெயலலிதா ஆயிரம் கோடி செருப்புகள் வைத்திருந்தவதானே...'

"ரணில் அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் சென்று அடிக்கடி சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து விளக்கம் அளித்து வருகிறாராமே...!"

"அதென்னவோ தெரியேல்லை... ஆனால் சண்டைக்கு ஆயத்தப்படுத்த உதவிகேட்டு... நாட்டை ஈடுவைத்து வருகிறார் எண்டது மட்டும் நல்லாத் தெரியும்..."

## விபத்து அபாயம்

யாழ் கண்டி வீதி திறக்கப்பட்டதை தொடர்ந்து அந்த A9 எனப்படும் நெடுஞ்சாலையில் வாகனப் போக்குவரத்து வெகுவாக அதிகரித்து விட்ட நிலையில், கட்டற்ற வேகத்தில் புழுதிகிளப்பி விரையும் வாகனங்களால் புதிய பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

பேரூந்துகளும், சிற்றூந்துகளும், பாரஊர்திகளும் ஏனைய கனரக வாகனங்களும் இடையறாது போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கையில் இடையில் பயணிக்கும் மிதிவண்டிப் பயணிகளும், பாதசாரிகளும் பெரும் அவலங்களையும் விபத்துக்களையும் சந்திக்க வேண்டிய அபாயநிலை தோன்றியுள்ளது.

விபத்துக்களை ஏற்படுத்தும் வாகனங்கள் விரைந்து மறைந்துவிடும் நிலையே அதிகமாக இருப்பது போல் தெரிகிறது. பாதிக்கப்பட்டவர்கள் நியாயம் கேட்க முன்னரே பாதிப்பை ஏற்படுத்தியவர்கள் பறந்து போய்விடுகின்றனர்.

குறிப்பாக 55ம் கட்டை முதல் பரந்தன் சந்திவரைக்குமான தெருவின் வாகனப் போக்குவரத்தின் வேகத்தை வெகுவாகக் குறைப்பது இடைக்கிடை வீதிப் போக்குவரத்தை கண்காணித்து ஒழுங்கு படுத்த வேண்டியதும் மிக அவசியமான தேவையாகியுள்ளது.

குறிப்பாக இந்த நெடுஞ்சாலை இரு கரையும் இன்னும் பல பகுதிகளில் மிதிவெடி அகற்றப்படாதுள்ள நிலையில் வேகமாக விரையும் வாகனங்களுக்கு அஞ்சி வீதிக்கரைக்குள் ஒதுங்குவோரும் ஆபத்தை எதிர்கொள்ளும் சந்தர்ப்பம் அதிகமாகவே உள்ளது. தென்பகுதியில் இருந்து வரும் வாகன சாரதிகளுக்கு வன்னி வீதிகளதும் மக்களதும் நிலை புரியாமல் இருக்கலாம். அவர்களுக்கு புரியவைக்க வேண்டியதும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி வாகன வேகத்தை கட்டுப்படுத்த வேண்டியது சம்பந்தப்பட்டோரின் அவசரப்பணியாக உள்ளது.

துன்பங்கள் வருமுன் காத்தல் நல்லதல்லவா!

## குவியும் பத்திரிகைகள்

இப்போது புதிது புதிதாக ஏராளமான பத்திரிகைகள் சஞ்சிகைகள் தமிழில் தோன்ற ஆரம்பித்துள்ளன... பெரும்பாலும் மக்களிடமுள்ள பலங்களையும் பலவீனங்களையும் நாடிபிடித்து பார்த்து 'கருத்து' ஊடுருவலை மேற்கொள்ளும் பல்வேறு விதமான பத்திரிகைகள் தமிழ் மக்களிடையே ஒரு 'மன' ஆக்கிரமிப்பு போரை நடத்தப் படையெடுத்துள்ளன.

நண்பர் ஒருவர் இது குறித்துப் பேசுகையில் சில தமிழ் மக்களின் பலவீனத்தை வைத்து பணம் பண்ண பத்திரிகை நடத்துகிறார்கள். இவர்கள் நீலப்படக் காட்சிகள் போன்று கவர்ச்சிகரமான படங்களையும் விடயங்களையும் பிரசுரித்து ஒரு வகை 'மஞ்சள்' பத்திரிகையை நடத்துபவர்கள். இன்னும் சிலர் 'பலத்தை' வைத்துப் பணம் பண்ண நினைக்கும் பத்திரிகையாளர்கள். இவர்கள் விடுதலைக்கான தமிழ்மக்களது போராட்ட சாதனைகளையும் தியாகங்களையும் வைத்து மக்களுக்குள் வியாபாரம் செய்து பணம் பண்ணுபவர்கள். உண்மையில் இவர்கள் அந்த மக்களுக்கான போராட்டத்துடன் எந்தவகையிலும் தொடர்பு கொண்டிராதவர்கள், 'பாதை' திறப்பு, புரிந்துணர்வு உடன்படிக்கை சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் மூன்றாம் வகையின் பலத்தையும் பலவீனத்தையும் வைத்து பத்திரிகை செய்பவர்கள்... இதற்கு விளக்கம் தேவையில்லை. ஆனால் இவர்கள் அனைவரும் ஏற்படுத்தப்போகும் கருத்தியல் தாக்கம் குறித்துதான் தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய காலம் இதுவாகும்.

'மக்களே போலும் கயவர்' என்ற குறள்வரிகளை நினைவிற் கொள்வது நல்லது.

கருத்தழிந்து, கலாச்சாரம் நலிந்து ஒரு இனம் ஒரு போதுமே தனது தனித்துவத்தை காப்பாற்ற முடியாது.

கருத்தியல் ஊடுருவல்களை கவனித்து பத்திரிகைகள் சஞ்சிகைகளில் மனதை ஈடுபடுத்தல் இன்றைய காலத்தின் அவசியமாகும்.



# திருத்தப்படவேண்டிய தவறுகள்

ஒருவர் தவறு செய்துவிட்டால் அதனை மீண்டும் செய்யாமல் எப்படித் திருத்துவது?

தவறினைத் திருத்துவது என்பது எளிதான செயல் அல்ல! இது இன்பம் அற்ற பணி!

ஆனாலும் திறமையுடனும் அனுதாபத்துடனும் செயலாற்ற வேண்டும். அப்பொழுதுதான் நாம் எடுத்த முடிவு சரியானது என்பதனை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்.

அவர்களின் உள்ளத்திலே தெளிவையும் ஊக்கத்தையும் தன்னம்பிக்கையையும் ஊட்டி அவர்களைத் திறமையுடன் செயலாற்றுபவர்களாக ஆக்கிவிட வேண்டும்.

இப்படிச் செய்யாமல் அவர்கள் தங்களின் தவறுகளைத் திரும்பத் திரும்ப செய்து கபட வேலை செய்பவர்களாக இருக்குமாறு அனுமதித்துக்கொண்டு இருக்கக் கூடாது.

தவறுகளைத் திருத்துவது என்றால்-

அவர்களை அழைத்துவரச் செய்து, "ஏன் இப்படிச் செய்தீர்கள்? இனிமேல் இவ்விதம் செய்யுங்கள்!" என்று உத்தரவு போடுவது அல்ல!

இவ்விதம் செய்தால் வீண் பகை விளையுமே அன்றி ஒழுங்காக எதுவுமே நடைபெறாது.

தவறுகளைத் திருத்துவதற்கு முன்பு, அத்தவறுகளைப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். அரைகுறை விவரங்களோடுபிறரைத் திருத்த முயன்றால் அது அவமானத்தில் தான் முடியும்.

அதற்கான முழு விவரங்களையும் சேகரித்த பின்பு அவ்விதம் நிகழ்ந்ததற்கு யார் காரணம் என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

அப்படிச் சிந்திக்கும் பொழுது சில சமயங்களில் நாமே அதற்கு மூலகாரணமாக இருப்பது தெரியவரும்.

அப்பொழுது நம்மை நாமே குறை கூறித் திருத்திக்கொள்ள வேண்டுமேயன்றி அநியாயமாகப் பிறர் மீது குறை கூறி அவர்களைக் கண்டிக்கக் கூடாது.

ஒரு தவறு பற்றிய முழு விவரங்களையும் அறிந்த பின்பு தவறு இழைத்தவரை மற்றவர்கள் மத்தியில் வைத்துக் கண்டித்து இழித்துரைத்துவிடக் கூடாது.

அப்படிச் செய்தால் அவருடைய தன்மானம் பெரிதும் பாதிக்கப்படும்! அதன் பயன் நம்மை வெறுக்கவும் ஆரம்பித்து விடுவார்.

அதனால், அவரைத் தனியே அழைத்துச் சென்று தவறுகளை எடுத்துக்காட்டி திருத்த வேண்டும்.

"பாராட்டும் பொழுது பலர் முன்னிலையில் பாராட்டு! தவறுகளைச் சுட்டிக் காட்டும் பொழுது தனியே கூப்பிட்டுச் சொல்" என்கிறார் ஆஸ்கார் ஒயில்டு.

"தவறை நீக்காமல் இரக்கம் கொள்வது படகில் ஓட்டையை அடைக்காமல் நீரை இறைப்பது போலாகும்" என்று கூறுகிறார் டில்வின்.

"எவனும் வேண்டுமென்றே தவறு செய்வதில்லை. எது உண்மையிலேயே சரி என்பதை அவன் அறியவீல்லை! அதனால் தன் மனதில் பட்டதை சரி என்று கருதுவதையே செய்கிறான்" என்று உரைக்கிறார் சாக்ரடிஸ்.

அலெக்சாந்தர் தம் சேனாதிபதியின் தவறினை அறிந்து அவரைக் கீழ்ப் பதவியான சுபேதார் பதவியைத் தந்தார்.

ஆனால் அந்த சேனாதிபதியோ கீழ்ப் பதவிக்குத் தள்ளப்பட்டதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அந்தப் பதவியை முன்பைவிட அதிகமாக நேசித்துச் செயலாற்றினார்.

ஒருநாள் அந்த சுபேதார் அலெக்சாந்தரைப் பார்க்க நேர்ந்தது. அவர் ஆனந்தமாக இருப்பதைக் கண்டு அலெக்சாந்தர் ஆச்சரியப்பட்டார்.

அவரைப் பார்த்து "தாங்கள் முன்பு போலவே சந்தோஷமாக இருக்கிறீர்களே! என்ன காரணம்?" என்று கேட்டார்.

அதற்கு அந்த சுபேதார் "என் தவறினை உணர்ந்து விட்டதுதான் நான் மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம். நான் சேனாதிபதியாக இருந்தபொழுது என் பக்கத்தில் வருவதற்கு எல்லோரும் பயப்படுவார்கள். ஆனால் இப்பொழுதோ எல்லோரும் என்னைப் பார்க்க வருகிறார்கள். என் மீது அன்பாகவும் இருக்கிறார்கள். பல விஷயங்களைப்பற்றிப் பேசி என் யோசனையையும் கேட்கிறார்கள்" என்றார்.

அலெக்சாந்தர் அவரைப் பார்த்து "சிறிய பதவியில் இருப்பது அவமானமாக இல்லையா?" என்று கேட்டார்.

அதற்கு சுபேதார் "மானமும் அவமானமும் மனிதனைப் பொறுத்ததே தவிர பதவியைப் பொறுத்தது அல்ல! உயர்ந்த பதவியிலிருந்து பிறரைத் துன்புறுத்துவதோ பயமுறுத்துவதோ கெட்ட காரியமாகும். அதனால்-

கீழ்ப் பதவியிலிருந்து கொண்டு பிறருக்கு உபகாரமாக வாழ்வது தான் உத்தமமான வாழ்வாகும்" என்றார்.

இதைப் கேட்டதும் அலெக்சாந்தர் சந்தோஷப்பட்டு மீண்டும் அவரை சேனாதிபதியாக்கினார்.

தவறைச் சுட்டிக்காட்டித் திருந்தும்படி செய்வது மிகவும் மகத்தான காரியமாகும்.

அலெக்சாந்தரின் செயலையும் அதற்கு சேனாதிபதி தந்த விளக்கத்தையும் தெளிவாகப் புரிந்து கொண்டால் தவறுகளை எளிதாகக் களைந்து எறிய முடியும்.

சுட்டிக்காட்டும் தவறுகள் மற்றவர்களுடைய மனதில் படிந்து புதிய திருப்பத்தை உண்டாக்க வேண்டும்.

அப்பொழுதுதான் அதை நம்முடைய திறமைக்குக் கிடைத்த வெற்றியாகக் கொள்ள முடியும். ○

மெர்வின்

---


## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 04 - 03 - 1970



விரச்சாவு 19 - 07 - 1996

**மேஜர் - புலிக்குட்டி**

(ஆனந்தராசா–ஜெயமோகன்)

விளாத்திகுளம் - ஓமந்தை

(சம்பவம்-ஓயாத அலைகள் -01)

தேசத்தின் விடியலுக்காய் பாசறை சென்று
ஈழமண்ணில் விதையாகி ஆண்டுகள்
ஆறு சென்றாலும் எமதன்பு புலிக்குட்டியே !
உன் கனவு நனவாகும் நாள் வெகு தொலைவில் இல்லை.

• தாய்- நாகேஸ்வரி
சகோதரர்கள்

(1790)

---

## வருடாந்த பொதுக்கூட்டம்



ஸ்கந்தபுரம் ஸ்ரீ முருகன் ஆலய
வருடாந்த பொதுக்கூட்டம்

இடம்:ஆலய மண்டபம்
காலம்:4.08.2002,ஞாயிற்றுக்கிழமை
நேரம்:மு.ப 10.00 மணி

*அனைவரையும் சமூகம் தரும்படி*
*இறையன்புடன்வேண்டுகின்றோம்.*

நன்றி -ஆலய பரிபாலனசபையினர்

(2085)

---

## 6ம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 1972 - 11 - 14



மண்ணின் மடியில் 1996 - 07 - 19

**லெப்டினனட்-தண்மதி**

திருமலைக்கு வெகுமதியாய்
வந்துதித்த தண்மதியே- நீ
விடுதலைக்கு விளக்கேற்றி கல்லறைக்குள்
காணுகின்றாய் நிம்மதியே;
தறுதலைகெட்ட பேய்ச்சிங்களத்தின்
குகையேறித் தலைகொய்த பெண்புலியே!
தேசமதன் விடுதலைக்காய் அண்ணனவன்
டானியலும்
காலமதன் கட்டளையால் வரலாறாய் ஆயினனே
உம் துயில் கலைந்து போகாமல் கல்லறையின்
மடியினிலே அமைதியாக மண்டியிட்டுக்
கலங்குதல்தான் நம்விதியே!

சகோதரர்கள்
செ.நெடுமாறன்
(காசாளர்–வருவாய்ப்பகுதி விசுவமடு)
சி.சிவனேசமலர்
(அரசினர் மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு)

(சி.7016)

---

உதயமாகிவிட்டது

## நிலா பதிப்பகம்

பிரதானசாலை
கிளிநொச்சி

வாடிக்கையாளர்களே!

*அதி நவீன அச்சு இயந்திரங்கள் (ஓப்செற்–கெஸ்ரெனர்)மூலம் உங்கள் தேவைகளை அழகாகவும், நேர்த்தியாகவும், விரைவாகவும் நிறைவேற்றிக்கொள்ள, குறித்த மணி நேரத்தில் உங்கள் வேலைகள் எதுவாயினும் செய்துகொள்ள நாடுங்கள்.*

**நிலா பதிப்பகம்**

பிரதான சாலை கிளிநொச்சி
முருகன்கோயிலுக்கு அருகாமையில்

வவுனியா வடக்கு
ப.நோ.கூ.ச.பதிப்பகம்
புதுக்குடியிருப்பு

கிளைகள்

மாறன் பதிப்பகம்
முல்லைசாலை
தருமபுரம்.

(சி.6956)

---

சா.துஷியந்தனின்

## டெங்கு

மருத்துவக் கைநூல் வெளியீடு


21. 07. 2002,ஞாயிற்றுக்கிழமை
பி.ப 3. 00 மணிக்கு
கிளி. வட்டக்கச்சி மகாவித்தியாலய
மண்டபத்தில் நடைபெறும்.




டெங்கு அரக்கனின்
பிடியிலிருந்து
எம் மக்களைக் காக்க
ஓரணியில் இணைவோம்

நலன்புரிச்சங்கம்
மலேரியா தடை இயக்கம்
கிளிநொச்சி.

(சி.6955)



# இளையநாதம்

## ஏழையின் பெருந்தன்மை

எழில்புரத்து மன்னர் ரகுபதி ஒவ்வொரு வருடமும் தனது அரண்மனையில் ஒரு போட்டி வைத்து பெறுமதி மிக்க தங்கப் பரிசுகளை வழங்குவது வழக்கம். இம்முறை இப் போட்டியில் இரு கேள்விகளை வைத்திருந்தார். ஒன்று இந்த உலகில் உயர்ந்தவர் யார்? இரண்டு இந்த உலகில் சிறந்த முட்டாள் யார்?

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிப்பவருக்கு இளவரசி "ஆனந்தவல்லி"யை திருமணம் செய்து வைப்ப தாக முரசொலிக்கவும் உத்தரவிட்டார். மன்னரின் ஆணைப்படி முரசொலிக்கப்பட்டதும் கூடியிருந்த மக்கள் கூட்டம் வியந்து நின்றது.

மறுநாள் அரசசபை கூடியது. இளவரசி "ஆனந்த வல்லி"யை மணந்து கொள்ள போட்டியாளர்கள் நிறைந்திருந்தனர். அமைச்சர் எழுந்தார். மன்னர் ரகுபதியையும் மகாராணியையும் இளவரசி 'ஆனந்த வல்லி'யையும் வணங்கி விட்டு மன்னரின் கேள்வியை சபையில் வாசித்தார்.

முதல் கேள்விக்கு சரியான விடையளிப்பவர்களுக்கே இரண்டாவது கேள் விக்கு பதிலளிக்க அனுமதி வழங்கப்படும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

போட்டி தொடங்கியது.

வரிசையாக பலர் மன்னரின் கேள்விகளுக்குப் பதிலளித் துக் கொண்டிருந்தனர். எந்தப் பதிலும்



மன்னருக்கு திருப்தியளிக்கவில்லை. அப்போது ஒரு முடவன் எழுந்தான்.

"அரசே! நான் ஒரு ஏழை. என் பெயர் இந்திரன். நான் பள்ளிக்கூட வாசலில் கடலை விற்பவன். பள்ளிக் கூடத் தில் கற்பிக்கப் படும் பாடங் கள் எல்லா வற்றையும் கேட்டுக் கொண்டிருப்பேன். தங்கள் கேள்விகளுக்குப் பதில் கூறலாமா? என்று தயக்கத்துடன் கேட்டான். மன்னர் அனுமதித்தார்.

"இந்த உலகில் உயர்ந் தவர் தாய் தான்" என்றான்.

"விளக்கம் தேவை" என்றார் மன்னார்.

"இந்த உலகில் நம்மை அவதரிக்கச் செய்பவள் தாய் தான். தாயை தெய்வமாக வணங்கும் பண்பாடு எங்களுடையது. அனைத்தையும் நாம் அன்னை உருவிலேயே பார்க்கிறோம். நாட்டை நாம் தாய்நாடு என்கிறோம். நம்மொழியை தாய் மொழி என்கிறோம். இப்பூமியை அன்னைபூமி என்கிறோம். அத்தோடு வாய் பேசத் தெரியாத பசுவை நாம் தெய்வமாக வணங்குகிறோம். அந்தப் பசுவுக்குத் தெரிந்த ஒரே ஒரு வார்த்தை "அம்மா" தான் என்றான் அந்த ஏழை இந்திரன்- மன்னர் வியந்து போனார்.

"இரண்டாவது கேள்வி இந்த உலகில் யார் முட்டாள் ? என்று கேட்டீர்கள் அது நீங்கள் தான்" என்றான் இந்திரன்.

மன்னருக்கு கோபம் வந்து விட்டது. கண்கள் சிவக்க இந்திரனைப் பார்த்தார். அவமானம் தாங்க முடியாத மன்னர் "விளக்கம் தேவை" என்று மீசையை முறுக்கியபடி கேட்டார்.

'மன்னரே... தவமிருந்து பெற்று, சீராட்டி நீங்கள் ஆளாக்கிய பெண்தான் 'இளவரசி'- தன்னுடைய வாழ்க்கையை முடிவு செய்ய வேண்டியது 'இளவரசி' அவர்கள் தான். அந்த உரிமை இளவரசிக்கு மட்டுமே உண்டு. ஏதோ இரண்டு கேள்விகளுக்குப் பதில் கேட்பதன் மூலம் இளவரசியின் திருமண விஷயத்தில் தலையிட உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? இளவரசியின் ஒப்புதல் கேட்காமல் இப்படி நீங்கள் முடிவு செய்தது ஏன்? சரியான பதிலைச் சொன்ன நான் இளவரசியை திருமணம் செய்து கொள்ள முடியுமா?

மன்னர் இந்திரனைக் கோபிக்கவில்லை. அவனின் அறிவுத்தன்மையை மெச்சினார். அவனின் விளக்கம் மன்னரின் அறிவுக் கண்களை திறந்து விட்டன. மன்னர் எழுந்து இந்திரனுக்கு பொன்னும், பொருளும் ஒரு பொட்டலத்தில் கொடுத்தார். இந்திரன் அதை வாங்கவில்லை.

"மன்னரே.... அரசகுலத்தில் மாப்பிள்ளை.பார்த்து இளவரசிக்கு மணம் முடித்து வையுங்கள். இனி இப்படி போட்டி வைப்பதில்லை என்று உறுதி அளியுங்கள். வேறு எதுவும் எனக்கு வேண்டாம்" என்றான் இந்திரன்.

"நீ சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். வாய்ப்புக் கிடைத்ததும் பயன்படுத்திக் கொள்ளாத உன் பெருந் தன்மையை நான் மெச்சுகிறேன்". என்றார் மன்னர். "நன்றி மன்னரே..." என்று இந்திரன் வீட்டுக்குத் திரும்பினான்.

(பிரஷகி)

## வாரம் ஒரு குறள் அறிவோம்



மனிதர்களாகிய நாம் எல்லோரும் எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருக்க வேண்டும். அவ்வாறு நாம் எல்லோரிடத்திலும் அன்பாக இருந்தால் தான் எம்மை எந்த வகையிலும் துன்பம் ஒரு போதும் அணுகாது.

இந்த அன்பானது கொடுக்கக் கொடுக்க குறையாது கூடிக்கொண்டே செல்லும் அவ்வாறான இந்த அன்பு இல்லாதவரை உலகத்தில் எவருமே மதிக்க மாட்டார்கள் இந்த அன்பில்லாதவர்கள் உயிரற்ற உடலும் எலும்பும் போல பிரயோசனமற்றவர்கள் இதனையே வள்ளுவர் அன்புடைமை என்ற அதிகாரத்தில் இனிமையாகக் கூறியுள்ளார்.

" அன்பின் வழியது உயிர் நிலை; அ∴திலார்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்ற குறளில் விளக்கியுள்ளார்

## ரதனும் சுதனும்



ரதன்:நீரில்எண்ணெய்வட்டத்தட்டாக மிதப்பதேன்


சுதன்:நீரைவிட எண்ணெயின் அடர்த்தி குறைவு அதனால் நீரில் எண்ணெய் மிதக்கின்றது. நீரும் எண்ணெயும் ஒன்றோடு ஒன்று இரண்டறக் கலக்காது. இவை இரண்டுக்கும் இடையில் எப்போதும் ஒரு பரப்பு இருக்கும் இந்தப் பரப்பில் ஏற்படும் பரப்பு இழுவிசையானது எந்த வடிவத்திற்கு குறைவோ அந்த வடிவத்தை எண்ணெய்ப்படலம் ஏற்கும். இந்தவடிவம் வட்டஉருவானது இதனால் நீரில் எண்ணெய் வட்டவடிவில் திட்டாக மிதக்கிறது.

மழைத்துளி கோளவடிவில் முத்துமுத்தாக விழுவதற்கும் இந்த பரப்பு இழுவிசைதான் காரணம்.-

## வரலாற்றில் தடம் பதிந்(த்)த விஞ்ஞானிகள்

### அலெக் சாண்டர் கிரஹம் பெல்

அம்மா! இண்டைக்கு அப்பாவோட தொலைபேசியில கதைக்கிறதுக்கு 2மணிக்கு வரச்சொன்னவையல்லோ கெதியா வெளிக்கிடுங்கோ போவம். என்று உங்களுடைய அம்மாக்களை அவசரப்படுத்தியிருப்பீங்கள் அப்படி அவரப்பட்டு அப்பாவுடன் பேசுவதற்கு காரணமாயிருந்த அந்த தொலைபேசியைப் பற்றியும் கொஞ்சம் பேசுவோமே "தொலைபேசி(Tele phone) யைக் கண்டுபிடித்தவர் யார்?"



என்று கேட்டால் அலெக்சாண்டர் கிரஹம்பெல் என்று உடனடியாக பதில் வரும் ஆனால் அவரைப்பற்றியோ அல்லது தொலைபேசி எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது? என்று கேட்டால் சிலருக்கு முழி வெளியேவரும். அவர்களுக்காக எனக்கு 'கிரஹம்பெல்' பற்றி தெரிஞ்சதை நான் அறிஞ்சதை சொல்லுறன் என்ன!

கிரஹம் பெல்லுக்கு சின்ன வயதிலிருந்தே, 'நாங்கள் கதைப்பம் மைக்கிலை ஒருவர் கதைச்சுக்கொண்டு இருக்க, 'எக்கோ பண்ணுது' எண்டு அப்படி மீண்டும் மீண்டும் ஒலி அலைகளை எழுப்பிக் காட்டுவதில் ஆர்வமிருந்ததாம். அதிலிருந்துதான் இந்த தொலைபேசி ஆசையும் வந்ததோ என்னவோ தெரியவில்லை! 1876 ம் ஆண்டு இவர் தொலைபேசியை கண்டுபிடிக்கவென புத்தாக்க உரிமைக்காக பதிவு செய்து நண்பர் 'வட்சனின்' உதவியுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டாராம்.

ஒரு நாள் ஒலி அலை அதிர்வுகளை மின்காந்ததொகுப்பிற்கூடாக செலுத்தவென தீவிரமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதுகைதவறி 'பெல்லின்' உடையில் அமிலம் கொட்டிவிடவே, நண்பரை "Mr.Watson here, I want you" என்று அழைத்த அந்த வேளை இருவரும் எதிர்பார்க்காத அதிசயம் நிகழ்ந்தது. அதுதான் 'பெல்' அழைத்தது தொலைவில் ஒரு அறையில் ஒலி வாங்கும் கருவியுடன் போராடிக் கொண்டிருந்த நண்பருக்கு அவரது கருவியில் மிகவும் துல்லியமாக மெதுவாக கேட்டதாம். ஆச்சரியமடைந்த நண்பர் உடனே பெல் இன் அறைக்கு வந்து நடந்ததைச் சொல்ல, 'பெல்' தன் வேதனை மறந்து துள்ளியே குதித்துவிட்டாராம். பெல் நண்பரை அழைத்த அந்த வசனம் தான் முதல் முதல் தொலைபேசி யில் பேசப்பட்ட வசனமாக கருதப்படுகின்றது. இந்த வசனம் தான் நீங்கள் அப்பாவோடை கதைக்கப்போற தொலைபேசியையும் கண்டுபிடிக்க காரணமாயிற்று.

என்ன நீங்களும் எதை யாவது கண்டுபிடிக்க வென்று வெளிக்கிட்டு விட்டீர்களா? ரெலிபோனை இல்லாவிட்டாலும் ஒரு ஜொலி போனையாவது கண்டுபிடிக்கவென்று வாழ்த்துக்கள்.


கல்யாணி



## மழைக்கோலம்

வெண்முகில்கள் கரு முகிலாய் மாறுது பார்-
அவை கதிரவனின் கண்களை மறைக்குது பார்
இருள் சூழ்ந்த உலகம் தோன்றுது பார் - இவை
மாந்தர்க்கு மகிழ்ச்சியை தருகுது பார்
பெரும் மரங்கள் காற்றிலே சுழலுது பார்-அவை
படபடவென முறியுது அதனையும் பார்
பறவைகள் இடம் தேடி அலையுது பார் -இவை
மனதிற்கு கவலையாய் இருக்குது பார்
மின்னல்கள் கண்களை பறிக்குது பார்-பேர்
இடிகள் காதைப் பிளக்குது பார்
சிறுதுளிகள் மண்ணிலே விழுகுது பார்-அவை
பெரும் மழையாய் இப்போ பெய்யுது பார்.

அ.ஆதவன்
தரம் – 8
கிளி.கனகபுரம் ம.வி.



இந்த T எழுத்துக்களைக் கொண்டு ஒரு கூடாரம் அமைக்க வேண்டும் உன்னால் முடியுமா? முயன்று பாருங்கள்




## சுறா

சுறா மீனில் 200வகை உள்ளன. அவற்றில் சில முட்டையிட்டும் சில சில குட்டி போட்டும் தனது இனத்தை விருத்தி செய்கின்றன. இவற்றில் சில 30அடி நீளமானவை. வெள்ளை சுறா மீன் டைகர் என்ற இன சுறா மீன்களே மிக அபாயக ரமானவை. இவ் இன சுறா மீனில் இருந்தே மீன் எண்ணெய் எடுக்கி றார்கள்.

தெ.மோகனதாசன்
கிளி.புன்னைநீராவிவித்தியாலயம்
தரம் – 11







## மனைவி தரும் நஞ்சு

லொயிட் ஜோர்ஜ் பிரிட்டிஷ் பிரதமராக இருந்து புகழ்பெற்றவர். அவர் பதவியில் இருக் கும் போதுதான் ஐரிஷ் சுதந்திரப்போர் மிக மும்முரமாக நடந்தது. லொயிட் ஜோர்ஜ் சிறி தும் விட்டுக் கொடாமல் ஐரிஷ் தெருக்களில் இரத்த ஆறு ஓடச் செய்தார்.அவர் காரியத்தில் மட்டும் கண்டிப்பானவர் அல்லர். பேச்சில் அப்படித்தான். எவரும் தம்மை மிகைத்து விட அவர் ஒருபோதும் விட்டு விடமாட்டார்.

ஒருநாள் அவர் பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒரு பெண் அடிக்கடி குறுக்கிட்டுக்கொண்டும் கூச்சலிட்டுக் கொண்டுமிருந்தாள். "ஒழிந்து போகட்டும்!" என்று லொயிட் ஜோர்ஜூம் அவளைச் சிறிதும் சட்டை செய்யாது தம்பாடிட்ற்கு மடைதிறந்தாற் போல சொற்பெருக்காற்றிக் கொண்டிருந்தார்.

தன்னைப் பொருட்படுத்தாதது அவளுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியதோ, என்னவோ கூட்டத்தின் நடுவில் கூச்சலிட்டுக்கொண்டே எழுந்தாள். "நீர் மட்டும் என்கணவராயிருந்தால் உமக்கு நான் நஞ்சைக் கொடுத்திருப்பேன்" என்று கத்தினாள். அவள் தன் கீச் சுக் குரலில்.

"நீ மட்டும என் மனைவியாயிருந்தால் நானும் வாங்கி மகிழ்ச்சிய்டன் சாப்பிட்டிருப் பேன்" என்றார் லாயிட் ஜார்ஜ்

கூட்டம் எங்கும் 'கொல்' என்று சிரிப்பு, அந்தப் பெண் இருந்த இடம் தெரியவில்லை.

## முப்பெரும் தலைவர்கள்

இரண்டாவது உலகப்போர் நடந்துகொண்டிருந்தபோது [illegible] நேத் தலைவர்களான ரூஸ்வெல்ட், சர்ச்சில், ஸ்டாலின் இம்மூவரும் முக்கிய விடயங்கள் பற்றிக் கலந் தாலோசிப்பதற்காகயால் டாவில் கூடிருந்தார்கள்.

அன்று காலை, உணவு உட்கொண்டதும் சர்ச்சில் பெரிய சுருட்டொன்றைப் பற்றவைத்துக் கொண்டு ரூஸ்வெல்ட்டும் ஸ்டாலினும் இருக்குமிடம் வந்து சேர்ந்தார். "தெரியுமா உங்களுக்கு? இன்றிரவு நான் ஒரு கனவு கண்டேன்.அதில் கடவுளே தோன்றினார். 'உன்னை உலகின் பிரதம மந்திரியாக ஆக்குகிறேன்.' என்று வாக்களித்தார்."

சர்ச்சில் கூறியதைக் கேட்டதும், "பார்த்தீர்களா,மறந்தே போய்விட்டேன். இன்றிரவு நானும் இதேமாதிரி ஒரு கனவு கண்டேன். அதில் கடவுளே தோன்றினார். நான் அவருடன் பேசினேன், அவர் என்னைப் பார்த்து, 'உன்னை உலக ஜனாதிபதியாக ஆக்கி விடுகிறேன்.' என்று வாக்களித் தார்." என்றார் ரூஸ்வெல்ட்.

இருவரும், அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்த ஸ்டாலினைப் பார்த்தார்கள். அவர் சொன்னார் .தம் வாயிலிருந்த 'பைப்'பை எடுத் துக் கொண்டு "நேற்றிரவு உங்களிருவருக்கும் அப்படியொரு வாக்கு அளித்ததாகவே எனக்கு நினைவில்லையே"

## அமெரிக்காவில் ஷா

ஜார்ஜ் பெர்னார்ட்ஷாவுக்கு அமெரிக்காவை அறவே பிடிக்காது முதலாளித்துவத்தை மும்முரமாக எதிர்த்தவர் அவர். 'பேபியன் சொசைட்டி' என்று ஒன்ற்றை ஏற்படுத்தி இங்கிலாந்தில் தொழிற் கட்சிக்கே வித்திட்டவர் அவர் தாம்.

ஷா ஒருமுறை அமெரிக்கா சென்றிருந்தார். அங்கு அவர் அதிக நாட்கள் தங்க விரும்பவில்லை. விரைவிலேயே மூட்டைமுடிச்சுக்களைக் கட்டிக் கொண்டார். அன்று அவர் நியூயார்க்கை விட்டுப் புறப் படப் போகிறார் என்பதைத் தெரிந்துகொண்டதும் பத்தி ரிகை நிருபர்கள் படையொன்றே அவரைச் சூழ்ந்து விட்டது. மற்றவர்களாயின் தவித்துப் போயிருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் அஞ்சுபவர் ஷாவா? கேள்விக் கணைகள் அவர்மீது பாயத்தொடங்கின. அவற்றையெல்லாம் அறிவார்ந்த தம் நாவால் மறித்து முறித்தார் ஷா.

"சரி, இதற்காவது சரியான பதில் சொல்லுங்கள்" என்று கூறிக்கொண்டே ஒரு நிருபர் ஷா அருகில் வந்தார்.

ஷா அவரை ஏறிட்டுப் பார்த்தார். அந்தப் பார்வையில் எதிரியை வென்ற ஏறின் பெருமிதம் பிரதிபலித்தது

"நீங்கள் நியூயார்க்கிலுள்ள எதனை அதிகம் விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார் அந்த நிருபர்.

'சட்' டென ஷா "அதை விட்டுவெளியேறுவதை" என்றாரே பார்க்கலாம்.

## இறப்புப் படுக்கையில் சர்வாதிகாரி

ஸ்பெய்ன் சர்வாதிகாரி ஒருவன் மரணப்படுக்கையில் கிடந்தான். 'இனி பிழைப்பது அரிது' என்று மருத்துவர்கள்
எல்லாரும் கூறிவிட்டார்கள். வாழ்நாளெல்லாம் கொடுமை புரிந்து வந்த அந்த சர்வாதிகாரிக்கு இறுதி நேரத்திலாவது ஆண்டவன் நினைவு ஏற்படட்டும் என்றெண்ணி குடும்பப் பாதிரியாரை வரவழைத் தார்கள்.

அவரும் வந்தார். சில மந்தி ரங்களைச் சொல்லிக் கொடுத்தார். "சர்வாதிகாரி நம் பகை வர்களைக் கர்த்தர் மன்னிக்க மாட்டாரா?" என்று எண்ணினார். பாதிரியார். எனவே சர்வாதிகாரியின் அருகில் சென்று "இப்பொழுதாவது உங்கள் பகைவர்களை மன்னித்து விடுங்களேன்" என்றார் பணிவோடு.

சர்வாதிகாரியின் விழிகள் விரிந்தன. புருவங்கள் மேலேறின. "ஆமாம் நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனால் இப்பொழுது எனக் குப்பகைவர்களே. கிடையாதே என் செய்வது? அவர்களை யெல்லாம் தான் ஏற்கனவே நான் சுட்டுத் தீர்த்துவிட்டேன்" என்றானே அந்தச் சர்வாதி காரி.

பாதிரியாருக்கு என்ன சொல்லுவதென்றே புரியவில்லை.



கடற்புலிகளின் பத்தாமாண்டு நிறைவு நாள் நிகழ்வின் போது கடற்புலிகளின் அணிவகுப்பு மாரியாதையினை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பார்வையிடுகின்றார்.

# கிளிநொச்சி மருத்துவமனையை புனரமைக்க அறுநூறு மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது

**வைத்திய அதிகாரி விக்கினேஸ்வரன் தெரிவிப்பு**

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையை மீண்டும் கிளிநொச்சியில் அமைப்பதற்கு அறுநூறு மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட மருத்துவ அதிகாரி ச.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எமது மருத்துவமனையில் தொடர்ந்து பல பற்றாக்குறைகள் இருந்து வருகின்றன. அதிலும் பல முக்கியமான மருந்து பொருட்களுக்கு பற்றாக்குறை இருக்கிறது.

குறிப்பாக உந்து கதிரிக்குரிய (எக்ஸ்ரே) படச்சுருள் இல்லாமலிருந்து தற்போது தான் கிடைத்திருக்கிறது அதுவும் சிறிதளவில் தான் கிடைத்திருக்கிறது.

இதேபோன்று அலடோனம் என்ற மருந்து எங்கள் மருத்துவமனையில் தற்போது இல்லை. இதன் காரணமாக எங்களிடம் சிகிச்சை பெறவரும் மக்களிற்கு அதனை தனியார் மருந்தகங்களில் வாங்கும் படி கூறவேண்டியுள்ளது.

நாளங்களினூடாகச் செலுத்தப்படும் ஊசி மருந்துகள் போதியளவில் இல்லை சலரோக நோய்களுக்கான மருந்துகளுக்கும் தட்டுப்பாடு உள்ளன என்று தெரிவத்துள்ளார்.

கிளிநொச்சியில் மீளக்குடியமாந்த மக்களிற்கு முக்கியமாக தேவைப்படுகின்ற கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் சேவை எப்பொழுது கிடைக்கும் எனக் கேட்கப்பட்டதற்கு ஏனைய நிறுவனங்கள் இயங்குவது போன்று எங்களுக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாது நாம் இயங்க முடியாது எங்கள் நிரந்தரக் கட்டடங்கள் சிறிலங்காப் படையினரின் சத்ஜெய நடவடிக்கையின் போது முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

அவற்றை திருத்துவதற்கு இதுவரை எந்தவித நிதியும் அரசால் அனுப்பப்படவில்லை. இந்த வருடம் எங்கள் மருத்துவமனைக்கு ஏழு லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை வைத்து எந்த பணியை மேற்கொள்வதென்று தெரியவில்லை.

எங்கள் மருத்துவமனையின் வேலியை சீர் செய்வதற்கு கூட இந்த நிதி போதாதுள்ளது. இந்த நெருக்கடியில் கிளிநொச்சியில் மருத்துவமனையை எழுநூறு படுக்கைகளை கொண்டதாக அமைக்க 600 மில்லியன் ரூபா நிதித் தேவைப்படுகின்றது.

இந்த நேரத்தில் மீளக்குடியமர்ந்து வருகின்ற மக்களின் சுகாதார நலன்களை கருத்தில் கொண்டு ஓரிரு கட்டடங்களை அமைப்பதற்கு மாவட்டமட்டத்தில் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

### கண்சிகிச்சை முகாம்

(கண்டாவளை)

விசுவமடு பிரதேச பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி தமிழீழ மாணவர் அமைப்பும், தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினரும் இணைந்து 317 மாணவர்களுக்கு கண்பரிசோதனை செய்து சிகிச்சையளித்ததோடு 14 மாணவர்களுக்கு மூக்கு கண்ணாடி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்..

நேற்று கிளி/தருமபுரம் ம.வி மண்டபத்தில் மூன்று வைத்தியர்களால் காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 மணிவரை கண்பரிசோதனை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமையால் இப்பகுதி மாணவர்கள் மிகுந்த நன்மையடைந்துள்ளனர்.

(14)

# யுத்தநிறுத்த உடன்படிக்கையில் புதிதாக மாற்றங்கள் செய்யவேண்டியதில்லை

**- அமைச்சர்.ஜீ.எல்.பீரிஸ்**

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இல்லையென்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள் ளார்.

பல்வேறு அமைப்புக்கள் இந்த உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று கோரியுள்ள போதும் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒரு பூரணமான ஆவணமென்று அரசாங்கம் கருதுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை செயல்படும் முறைகுறித்து அரசாங்கம் திருப்தியடைந்துள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் திகதி குறித்து இதுவரை உறுதியான தீர்மாணம் எதுவும் எடுக்காத போதிலும் நோர்வே பிரதிநிதிகள் அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் அதுபற்றி மிகுந்த ஆக்கறையுடன் பேச்சுவார்த்தை நடத்திவரு வதாக அமைச்சர் பீரிஸ்.தெரி வித்துள்ளார்.

அண்மையில் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் இருவர் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் குறித்து அரசாங்கம் நோர்வே பிரதிநிதிகளிற்கு இது பற்றி அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக மூன்று தரப்பினர் மத்தியில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் திருகோணமலையில் எண்ணெய் தாங்கியை இந்திய அரசாங்கத்திற்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தேவை கிடையாது எனத் தெரிவித்தார்.

பிரதமமந்திரி தெரிவித்துள்ளதன் படி சிறிலங்காவின் எந்த பிரதேசம் சம்பந்தமாகவும் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு மாத்திரமே உண்டு என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

### 1000 ரூபா பணத்தை ஒப்படைக்க ஏற்பாடு

அண்மையில் சமாதான அணியாக வருகைதந்த தென பகுதி பாடசாலை மாண வர்கள் கிளி.வலய மாணவர்களுக்கு அன்பளிப்பாக ஒரு தொகுதி புத்தகங்கள் அன்பளிப்பு செய்தது தெரிந்ததே.

இப்புத்தகத் தொகுதியில் இருந்து 1000 ரூபா பண நோட்டும், மின் கட்டண பற்றுச் சீட்டும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இத்னை குறிப்பிட்ட முகவரியுடைய மாணவருக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையினை வன்னி மாவட்ட கல்விக் கழக பொறுப்பாளர் ஞானம் எடுத்து வருகிறார் (14)

# யுத்த நிறுத்த உடன்பாட்டை மறுசீரமைப்பதற்குத் தயார்

**- ஒஸ்ரின் பெர்ணான்டோ**

விடுதலைப் புலிகளின் கடற்போக்குவரத்து மற்றும் நடமாற்றம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையை தீர்க்கும் வகையில் போர் நிறுத்த உடன்பாட்டை மறு சீரமைக்க தயாராகவிருப்பதாக சிறிலங்கா அரச தரப்பு தெரிவித்துள்ளது.

சிறிலங்கா படைத்துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த செவ்வியில் இதனைத் தெரிவித் திருப்பதுடன் இதற்காக பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# உளவு நடவடிக்கையில் சிறிலங்கா விமானங்கள்

யாழ்ப்பாணம் தென்மராட்சி வான்பரப்பில் சிறிலங்கா வான் படையின் விமானங்கள் தொடர்ந்து உளவு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த சில நாட்களாக இந்த விமானங்கள் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் காலை முதல் மாலைவரை தென்மராட்சிப் பகுதியில் இந்த விமானங்கள் நீண்டநேரமாகப் பறந்ததாகவும் இந்த நிகழ்வு மக்கள் மத்தியில் சமாதான முயற்சி பற்றிய சந்தேகங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இந்த விமானங்கள் வன்னி மற்றும் தென்மராட்சிப் பகுதியை அண்டிய கடற்பகுதி பூநகரி, சங்குப்பிட்டி ஆகிய கடற் பகுதிகளை மையமாகக்கொண்டே உளவு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன.

### வீதி விபத்து

யாழ் - கண்டி ஏ-9 பிரதான வீதியூடாக நேற்றுமாலை சென்று கொண்டிருந்த புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சுக்கு சொந்தமான வாகனமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானது.

ஆயினும் பெரும் சேதமெதுவும் ஏற்படாததைத் தொடர்ந்து விபத்துக் குள்ளான இரு தரப்பினரும் சுமுகமாக பிரச்சினையை தீர்த்துக் கொண்டனர்.

## நேர்நோக்கு

### சட்டத்தால் அல்ல...

சிறிலங்காவின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பாராளுமன்றத்தில் 37 புதியநகல் சட்டமூலங்களைச் சமர்ப்பிக்க உள்ளதாக சிறிலங்கா அர சாங்கம் அறிவித்திருக்கிறது.

சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடி என்பது வெளிப்படையான ஒன்று இந்த நெருக்கடி கடந்த ஆட்சிக் காலத்திலேயே தீவிரமடைந்து விட்டது என்பதும் நன்கு தெரிந்த ஒன்றுதான். தவறான புள்ளி விபரங்கள் மூலமே முன்னைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் "பொருளாதார வளர்ச்சி" வீதங்களை அறிவித்து வந்தது.

அத்துடன் பொருளாதார நெருக்கடியை ஒப்புக்கொள்ளாதது மட்டுமல்ல மேலும் நெருக்கடியை அதிகரிக்கும் விதமாக விடாப்பிடியாக பாரிய யுத்தத்தை அந்த அரசு தொடர்ந்ததனால், என்றுமே மீள முடியாத அளவு சீர்குலைவு ஏற்பட்டது.

இப்பொழுது ஆட்சி புரியும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், யுத்தத்தைத் தொடரும் நிலைப்பாட்டிலிருந்து மாறி பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்ற முடிவை மேற்கொண்ட மைக்கு, இப்பொருளாதாரச் சீர்குலைவும் முக்கிய காரணமாகும்.

இந்நிலையில் ஆட்சிக்கட்டிலில் ஏறியவேளை சமாதான முயற்சிகளில் அது காட்டிய வேகமும் தீவிரமும் மிக அதிகமாகவே இருந்தது. விரைவான பொருளாதாரத் தடை நீக்கம், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டமை வன்னியை உலகின் கண்களிலிருந்து மறைத்து வைத்துவிட முன்னைய ஆட்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகளை கைவிட்டமை என துரித நடவடிக்கைகளை அது எடுத்தது.

ஆனால் நிலைமை இன்று அவ்வாறில்லை என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல் செய்வதில், தாமதம் ஏற்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டிருக்கும் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பேச்சுவார்த்தைகள் தாமதமாகினாலும் கூட பேச்சுவார்த்தைகள் நடைபெற்றே தீரும் எனக் கூறியிருக்கிறார் தாய்லாந் தில் ஜூன் மாத நடுப்பகுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட பேச்சுவார்த்தை ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் நடைபெற மாட்டாது என்பது பெரும் பாலும் உறுதியாகிவிட்டது.

இந்தத்தாமதம். சமாதானம் குறித்து மக்கள் மத்தியில் இருந்த நம்பிக்கையை மட்டும் பாதித்து விடவில்லை. சிறிலங்கா தனது இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளப் பெரிதும் நம்பியிருக்கும், உதவி வழங்கும் நாடுகள், அமைப்பு கள் போன்றவற்றின் மத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்திவரு கின்றது.

அவ்வாறு இல்லாவிடின், சமாதானப் பேச்சுவார்த்தை களின் போது பெறப்படும் முடிவுகளைப் பொறுத்தே சிறிலங்காவுக்கு வழங்கும் உதவிகள் அமையும் என அவை கூறியிருக்க மாட்டா. மாறாக பொருளாதார உதவிகள் விரைவாகவே கிட்டி சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடியில் தளர்வு ஏற்பட்டிருக்கும். எனவே சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்துவதன் மூலமே சிறிலங்கா தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியுமே தவிர பாராளுமன்றத்தில் புதிய சட்ட மூலங்க ளைக் கொண்டு வருவதன் மூலமோ அல்லது முன்னைய ஆட்சியாளர்களைச் சாடுவதன் மூலமோ மீட்சி கிடைக்கப்போவதில்லை. பொருளாதார வளர்ச்சி ஏற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதன் மூலமே அதனைச் சாதிக்கமுடியும். பொருளாதார வளர்ச்சியும் யுத்தமும் எதிர் எதிர் துரு வங்கள். சமாதானம் மட்டுமே பொருளாதார மீட்சிக்கு உதவக்கூடியதாகும். இதனை மக்கள் புரிந்து கொண்டுள் ளனர். ஆனால் ஆட்சியாளர்கள்.......?

# நறுக்கேள...



வழக்கமாகிவிட்டது. காரணமற்ற வகையில் கண்டபடி மிரட்டுவது, எச்சரிப்பது, அச்சுறுத்துவது எல்லாம் மிகவும் மோசமான பலவீனமான நிலையில் நிற்கும் ஒருவரின் ஒருவித மனநோயின் வெளிப்பாடென்றே உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்தவகையில் பார்த்தால் சந்திரிகா இப்போது மிக மோசமாக உளவியல் ரீதியிலான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளார் என்பதை அவரின் அனைவரும் வியப்புடன் பார்த்துச் சிரிக்க சுமார் அரைமணிநேரம் 'பைலா' இசைக்கு நடனம் ஆடியுள்ளார். அவரின் நெருங்கிய (ஒருகாலத்திய) சகாவும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்தராஜ பக்ஷவே அந்த கண்றாவிக் காட்சியைக் காணச்சகிக்காது எழுந்து போகுமளவிற்கு ஆடியுள்ளார் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்...

அது போகட்டும் படுகயங்கர

## சந்திரிகாவின் மிரட்டல்கள்

தனக்கு உயிருக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை எற்படும் வேளையில்தான் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவின் மீது பாய்ந்து அவரது கழுத்தில் தாக்குவேன் என சிறிலங்கா வின் சனாதிபதி தனது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கூட்டத்தில் பேசும் போது கூறியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் சில வாரங்களின் முன்தான் இதேமாதிரியான அவரது கட்சிக் கூட்டத்தில் வைத்து சிலரது தோலை உரிப்பேன் என எச்சரித்திருந்தார்.

இப்போதெல்லாம் அவர் மற்றவர்களை தெருச்சண்டியர்கள் பாணியில் மிரட்டல் விடுவது அண்மைக்கால நட வடிக்கைகள் வெளிப்படுத்தி வருகின்றன.

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட, உலகிலேயே அதிகளவிலான சர்வாதிகார வல்லமையை சட்டரீதியாகக் கொண்ட ஒரு சனாதிபதி இவ்வாறெல்லாம் ஒரு மூன்றாந்தர பண்போ, படிப்பறிவோ அற்ற அரசியல் வாதிபோன்று பேசுவது என்பது கோமாளித்தனமான செய்தியாகும். அண்மையில் இவர் கொழும்பில் பெரிய ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் நடைபெற்ற கல்யாணவிழா ஒன்றுக்கு பிரதம அதிதியாகவும், திருமணப்பதிவுக்கான சாட்சிகளில் பிரதானமான நபராகவும் கலந்து கொண்ட வேளை, அந்தவிழாவில் கொலைஞர்களான பாதாள உலகக்கும்பலைச் சேர்ந்தவர்களை தனது பாதுகாப்புப்பிரிவில் உயர் கௌரவம் கொடுத்து பணியிலமர்த்தியவர் தனது பாதுகாப்பு குறித்து கவலைப்படுவது விசித்தரமாகத் தெரியவில்லையா....?



## மாரப்பனவின் பாரபட்சம்

வடக்கிலும், கிழக்கிலும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், ஊர்வலங்கள், ஹர்த்தால் போன்றவற்றை நடத்த தடைவிதிக்கப்போவதாக சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்துள்ளார்.

இத்தகைய ஹர்த்தால், பேரணிகள், மற்றும் அமைதிவழி ஆர்ப்பாட்டங்கள் தான் வடக்கு கிழக்கு பகுதிகளில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களுக்கு காரணம் என்பதுதான் அவர் இந்த அறிவிப்பினூடாக தெரிவிக்கும் விடயமாக அரசின் கொடுமைகளுக்கோ, அடக்குமுறைகளுக்கோ எதிராக, அவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாத பொதுமக்கள் (அவர்கள் யாராக இருந்தாலும் சரி ...) கிழந்தெழுந்து தமது உணர்வுகளை வெளிக்காட்ட உதவும் சனநாயக ரீதியிலான, அணுகுமுறைகள் தான் மேற்குறிப்பிட்ட போராட்ட வழிமுறைகள்.



இதனை அனுமதிக்க மறுப்பதென்பது ஒரு சனநாயக விரோத நடவடிக்கை என்றே கூறவேண்டும்.

அதுசரி வடக்கிலும் கிழக்கிலும் தான் இதற்கு அனுமதி இல்லையென்றால் ஏனைய பகுதிகளில் இவற்றை நடத்தலாம் என்றுதானே அர்த்தம்.

ஆக இங்கும் பறிக்கப்படுவது வடக்கு-கிழக்கு சிறுபான்மை இனத்தவரின் அடிப்படை உரிமைகள் தான்.

தென்பகுதியில் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால்கள், பேரணிகள் நடைபெறும் வேளைகளில் இப்போது வடக்கு கிழக்கில் நடந்ததைவிடவும் மிக மோசமான அநாகரிகமான அசம்பாவிதங்கள் நடந்துள்ளன, நடந்தும் வருகின்றன.

ஆனால் அவற்றிற்கான அனுமதியை மறுக்கும்திராணி அமைச்சர் மாரப்பனவுக்கு இல்லை... எனவே அதனை அனுமதிப்பதைத் தவிர வேறுவழியில்லை....

முன்னாள் சட்டமா அதிபரான திலக்மார்ரப்பனவே பாரபட்சமான முறையில் தனது 'பாதுகாப்பு' அமைச்சின் செயற்பாடுகளை மேற்கொள் வதைப் பார்க்கையில் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான பாதுகாப்பு மேலும் பெரிய கேள்விக்குறியாகவே தெரிகிறது.

## பாதுகாப்புப் பாதகர்கள்

இதுவரையில் சுமார் 0000க்கும் அதிகமானோர் சிறிலங்காப்படையிலிருந்து தப்பியோடியுள்ளனராம்.

இவர்கள் அனைவரும் சிறிலங்காவை இறுதிமூச்சு உள்ளவரை பாதுகாப்போம் என்று நெஞ்சு நிமிர்த்தி உறுதியுரை செய்துகொண்டவர்கள்தாம்.

ஓடிவிட்டார்கள்... அதுவும் தப்பியோடிவிட்டார்கள். இதுவே அழுத்தமான சில பதிவுகளை மனதில் ஏற்படுத்தியுள்ள விடயமாகும்.

தப்பியோடுமளவிற்கு படைத்தரப்பு என்ன குறையை வைத்ததாம்? அல்லது என்ன நெருக்கடியைக்கொடுத்ததாம்?

வடக்கு-கிழக்கு போர்முனை பணிக்கு அனுப்பியதைத் தவிர வேறொன்றுமில்லை. போர்முகத்தில் போருக்கு முகம்கொடுக்க முடியாதவர்களாகி விட்டார்கள் அவ்வளவுதான். அது கிடக்கட்டும் அவர்களின் தேசப்பற்று அவ்வளவுதான் என விட்டுவிடுவோம்.

ஆனால் இப்போது சொல்லப்பட்டுள்ள விடயம்தான் வேடிக்கையானது. சொன்னவர் சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலர் ஒஸ்டின் பெர்ணான்டோ. அவர் சொன்ன விடயம். சிறிலங்காவில் இன்று குற்றச்செயல்கள் பல்வேறு வகையில் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு அதிகரித்துள்ளமைக்கும், அதன் பாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமைக்கும் இந்த தப்பியோடும் படையினர்தான் பிரதான காரணம் என்பதே யாகும்.

ஓடும்போது அவர்கள் தம்வசமிருந்த ஆயுங்களுடன் ஓடியுள்ளார்கள். இவர்கள் அனைவருமே தமிழ்ப்பகுதிகளை துவம்சம் செய்ய விசேட பயிற்சி அளிக்கப்பட்டவர்கள். ஆயுதங்களும் அவற்றைக் கையாள்வதற்கான பயிற்சியையும் சிறிலங்கா அரசாங்கத்தாலேயே அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதெல்லாம் இன்று தென் இலங்கைக்கு அச்சுறுத்தலாக மாறிவிட்டுள்ளது.

"கெடுவான் கேடுநினைப்பான்" என்ற பழமொழியே இப்போது நினைவுக்கு வருகின்றது.

தப்பியோடிய படையினரின் ஒரு சாரார் பாதாள உலக்கும்பல்களுடன் இணைந்துள்ளார்கள். பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களோ சனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் முக்கியஸ்தர்களாக இருந்துள்ளனர். சனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர்களோ ஏராளமான அரசியல் குற்றச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆகமொத்தம் சிறிலங்காவுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவென தேர்ந்தெடுக்கப்பட்ட படைகள் சிறிலங்காவின் பாதுகாப்பை கெடுக்கும் படைகளாகி விட்டன...

## இஸ்ரேலியர்களின் குறி




இஸ்ரேலின் உலங்குவானூர்திகளில் பொருத்தப்பட்ட இயந்திரத் துப்பாக்கிகள். பாலஸ்தீனிய தலைவரின் தலைமையகம் மீது மேற் கொண்ட தாக்குதலின் போது எடுக்கப் பட்ட படம்.

## வெற்றிக்களிப்பில் ரொனால்டோ



உலகக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் ஜேர்மனியை தோற்கடிக்க 2கோல்களையும் போட்ட பிரேஸிலின் நட்சத்திர வீரர் ரொனால்டோவின் வெற்றிக்களிப்பு - அவரை கட்டியணைத்து மகிழ்ச் சியைப் பகிர்ந்து கொள்ளும் சகபிரே ஸில் வீரர் ரிவால்டோ ரொனால்டோ அடித்த இரண்டாவது கோல்.

## புஷ்ஷின் திட்டம்



தனது அடுத்த பயங்கரவாதத்திற்கெதிரான போரின் தாக்குதல் இலக்காக ஈராக்கை நிர்ணயித்துள்ள அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ், ஈராக் அதிபர் சதாம் ஹூசைனை உயிருடன் பிடிக்க அல்லது கொல்ல சி.ஐ.ஏக்கு அனுமதி வழங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## திடீர் இராஜினாமா



மலேசியாவின் பிரதமர் பதவியில் இருந்து திடிரென ராஜினாமா செய்து அதிர்ச்சியை ஏற்படுத்தி மகதீர் முகம்மது உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தனது கட்சியினருடன் காணப்படுகிறார்.

பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ஆம் ஆண்டு யூலை மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது